பள்ளம்புலம் குமரக்கோட்டம்



# திருமுருகன் பிள்ளைத்தமிழ்



தீவகம். வே. இராசலிங்கம்

வெளியீடு: பாரதி பதிப்பகம் - கனடா

இலங்கை யாழ்ப்பாணம், சரவணையூர்,

# குமரக்கோட்டம்
# பள்ளம்புலம் திருமுருகன்
# பிள்ளைத்தமிழ்

பாடியவர்:
தீவகம் வே. இராசலிங்கம்.
(குமரக்கோட்டன்)

வெளியீடு:
பாரதிவயல் பதிப்பகம்
பிறம்ரன்-கனடா.
தை-2013

## நூலின் விபர அட்டவணை

நூலின் பெயர்: பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத்தமிழ்

நூலாசிரியர்: தீவகம் வே. இராசலிங்கம்.

வெளியீடு: பாரதிவயல் பதிப்பகம்.

முதற்பதிப்பு: தை-2013

தட்டச்சு: தீவகன்.
வடிவமைப்பு: தீவகன்.
அட்டைப்படம்: தீவகன்.



பதிப்புரிமை: நூலாசிரியருக்கே.



**Name of the Book:** PALLAMPULAM THIRUMURUGAN PILLAITHTHAMIL

**Author:** THEEVAGAM. V. RAJALINGAM
G.C.E(O.L/A.L English Medium, Dip. in. Web.Design

**Language:** Tamil

**First Edition:** January (Thai Matham) 2013

**Type Setting, Design and Front Cover Page:** Theevagan.

**Number of Copies:** 500.



**Copy Right:** Author.

உ

சிவமயம்

# யாழ்/சரவணையூர்
# பள்ளம்புலம் குமரக்கோட்டம்
# திருமுருகன் பிள்ளைத்தமிழ்!

பாடியவர்: தீவகம் வே. இராசலிங்கம்

வெளியீடு: பாரதிவயல் பதிப்பகம்
பிறம்ரன் கனடா.

# சரவணையூர், குமரக்கோட்டம் திருமுருகன் பிள்ளைத்தமிழ்

## என்னுரை

பிள்ளைத்தமிழ் இருவகைப்படும். இவை ஆண்பாற் பிள்ளைத் தமிழ் பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரண்டு வகையாகும். காப்புப் பருவம் முதல் அம்புலிப் பருவம் ஈறாய் ஏழுபருவங்களும் இருவகைப் பிள்ளைத் தமிழுக்கும் பொதுவான பருவங்களாம். ஏனைய மூன்று பருவங்கள் வேறுபட்டு வரும். ஆண்பாற் பிள்ளைத் தமிழாயின் சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய பருவங்களும், பெண்பாற் பிள்ளைத் தமிழாயின் அம்மானை, நீராடல், ஊசல் ஆகிய பருவங்களாலும் அமையப் பெறுகிறது.

இனிய மெல்லிய குளிர்தரு சொற்கள் இலங்கும் தமிழ் மொழியில் அவ்வினிமை நலத்தினைச் சுவையாக்கிக் கொடுப்பது பிள்ளைத் தமிழ் பாட்டாகும். மக்கள் வாழ்நாள் முழுமையிலும் 'பிள்ளைப் பருவம்' என்பது எத்துணை இனிமையானதோ, அத்துணை இனிமை யானது பிள்ளைத்தமிழ்.

**"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்!"**

என்ற வள்ளுவர் குறள் குழந்தைப்பருவம் இனிமையானது என்பதற்கு அடையாளமாகத் திகழ்வது ஆகும்.

கடவுளர் இடத்திலும், கற்றவர் இடத்திலும் அவர்தமை சிறு பிள்ளையாகக் கண்டு எழுதப்படும் பிள்ளைத்தமிழ்ப் பாக்கள் இன்பம் தருவது ஆகும்.

### காப்புப் பருவம்:-

கடவுளர் பல்லோரிடத்திலும் குழந்தையாகத் திகழும்படியான பருவத்தில் அவர்களைக் காக்கும்படி வேண்டுவது காப்புப் பருவமாகும். இது இரண்டாம் மாதத்தில் நிகழ்வதாகும்.

### செங்கீரைப் பருவம்:-

தளிரது கொண்டு செங்கீரை ஆடும் பருவம். கால்களை ஊன்றிக் கைகளைப் பதித்து ஆடும் குழந்தையின் பருவம் செங்கீரை எனச் சிறப்புறுகின்றது. ஐந்தாம் திங்களில் நிகழ்வது இப்பருவமாகும்.

### தாலப் பருவம்:-

தாலேலோ என்று தமிழ்கொஞ்சி வருவது தாலாட்டுப் பருவமாகும். இது ஏழாந் திங்களில் நிகழ்வது ஆகும்.

### சப்பாணிப் பருவம்:-

இரு கரங்களையும் ஒன்று சேர்த்துக் களிக்கும் பருவம் இது.ஒன்பதாந் திங்களில் நிகழ்வது இதுவாகும்.

### முத்தப் பருவம்:-

குழந்தையை முத்தம் தருமாறு தாய் தந்தையர் முதலியோர்

வேண்டும் பருவம் இது. இது பதினோராம் திங்களில் நிகழ்வது.

**வருகைப் பருவம்**

சிறுநடை நடக்கும் சின்னக் குழந்தையைத் தம்பால் நடந்து வருமாறு தாய் தந்தை முதலியோர் வேண்டுதல் இப்பருவமது ஆகும். இது பதின்மூன்றாந் திங்களில் நிகழ்வது ஆகும்.

**அம்புலிப்பருவம்**

15ஆம் மாதத்திற்குரிய இப்பருவத்தில் நிலவைப் பாட்டுடைத் தலைவனுடன் விளையாட வரும்படி அழைப்பது. இப்பருவத்தைச் சாம, பேத, தான, தண்டம் என்னும் நான்கு வழிகளில் அமைத்துப் பாடுவர். இப்பருவம் பாடுவதற்குக் கடினமான பருவம் என்பர்.

**சிற்றில் பருவம**

சிறுவர் சிறுமியர் கட்டிய சிற்றிலை அழித்துக் களிக்கும் அழகுப் பருவமிது ஆகும். சிற்றில் அழிக்கப்படுவதைத் தடுக்க வரும் ஏனைய குழந்தைகளின் அழுகையைக் கூறும் இப்பருவமானது பதினேழாம் திங்களில் வருவதாகும்.

**சிறுபறைப் பருவம்:-**

குழந்தை சிறுபறை கொட்டி ஆடுகின்ற பருவம் இது. பத்தொன்பதாம் திங்களில் வருவது இப்பருவம் ஆகும்.

**சிறுதேர்ப் பருவம்:-**

சிறுதேர் உருட்டி விளையாடும் சின்னக் குழந்தையின் பருவம் ஈதாம். இது இருபத்தொன்றாம் திங்களில் நிகழ்வதாகும்.

பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் சொல்லும் சிறு பருவங்களின் அழகினைக் கூறும் பாவடிவங்கள் பல கடவுளர்மேல் அவர்தம் கோவிற் சிறப்புக்களோடு எழுதப்பெற்றிருக்கிறது. அருள்மகான் குமர குருபரர் எழுதிய மீனாட்சி அம்மை பிள்ளைத்தமிழ், வைணவப் புனிதர் பகழிக்கூத்தர் அருளிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத் தமிழ், பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம் எழுதிய இணுவைச் செகராசசேகரப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ் எனப் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றதினால், பள்ளம்புல முருகன் பிள்ளைத்தமிழ் பாட வந்த அழைப்பை வரவேற்று யானும் எழுதத் துணிந்தேன்.

1986 ஆவணியில், கனவில் ஒருநாள் முருகன் சிறுவனாக வந்து என்னுடன் விளையாடினான். கோவில் வெளி மண்டபத்தில் அவன் ஓட ஓட நான் பிடித்து விளையாடுகிறேன். கோவில் மதிற்சுவர், தோட்டங்கள் என்று அவன் ஓட ஓட நான் பிடிக்கக் கலைக்கின்றேன். அன்று காலை என்னைக் கனடாவுக்குப் புறப்படுமாறு எழுதிய கடிதம் ஒன்று என் கைக்குக் கிடைக்கிறது.

அன்று புறப்பட்டவன் தான் இந்த நற்பூமியில் கால்வைத்ததும் எனக்குக் கிடைத்த முதற்சில வெள்ளிகளை அவனுக்கே அனுப்பி வைத்தேன். தொண்டர் ச.மகாலிங்கம் ஆசிரியர் அவர்களிடம் எனது மனைவியார் சென்று கையளித்தார். நான் துன்பமுறும் பொழுதெல்லாம் முருகன் என்னோடு வந்து கதைப்பான்.

அவனைக் குழந்தையாகக் கண்டு எழுதியதெல்லாம் உண்மையானவை. அவன் குழந்தையாகவே எனக்கு இன்னமும் தெரிகிறான்.

அவனிடம், அவன் முன்றலில் நான் படித்தவையே எனது கவிதைப் பயணத்தின் துடுப்புக்கள்.

ஈழத்தில் நடைபெற்ற போருக்குப் பின்னரான பிள்ளைத்தமிழ் இதுவாகத்தான் இருக்கும் என்பது எனது நம்பிக்கை.

ஒரு மனிதன் பிறந்த தேசம், இருந்த நிலம், சமயத்தொடும் கொண்ட பற்று, கடவுள் என பலவித தொடர்புகளோடு வாழ்ந்து கொள்கிறான்.

இது ஒரு சமயத்தோடும், சமூகத்தோடும் தொடர்புபட்ட எழுத்தாக மட்டுமே கொள்ளப்பட்டு, எழுதப்பட்டிருக்கிறது.

மக்களின்மேல் மக்கள் ஏற்படுத்தும் சில சீர்கேடுகளால் அவதியுறும் ஒருசில காட்சிகள் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.ஒரு புத்தகம் அதன் காலத்திய பதிவுகளைக் கொண்டிருப்பது நியதியானது. ஆனாலும் இங்கே ஒரு ஊரின் வரலாற்றில் படிந்துபோன அந்தப் பழைய நினைவுகளும், புதிய காட்சிகளும்தான் வந்து நிற்கின்றன.

இது கடவுளின்மேற் பாடப்பட்ட ஒரு காதற்புத்தகம். அது மட்டுமே இலக்கு.

என்மொழியில் நான் வணங்கும் தெய்வத்தின்மேற் தொடுத்த பாமாலை என்பதை மட்டும் உணர்ந்து படியுங்கள். ஓரளவு, பள்ளம்புலம் என்ற பண்பார்ந்த ஒரு பூமியின் பதிவேடுகள் என்பதைக் கண்டு கொள்வீர்கள். நாம் வணங்கிய கந்தக் கடவுளையும் கண்டு கொள்வீர்கள்.

இந்தப் புத்தகத்தை வடிவுற அச்சமைத்த, கவிஞர் தில்லைச்சிவனின் மைந்தர் திரு. சி.தயாபரன்(புத்தன்) அவர்களுக்கும், விகடன் அழுத்தகம்-கொழும்புப் பணியாளர்களுக்கும், இந்த நூலுக்கு அணிந்துரை நல்கிப், பலம்சேர்த்த ஆசிரியமணி திரு. ச. மகாலிங்கம் ஆசிரியர் அவர்களுக்கும், கவிஞர் அறிமுகத்தை எழுதிக் கௌரவம் செய்த விகடன் அழுத்தக அதிபர் சி.தயாபரன் அவர்களுக்கும் மாறாத நன்றியையும் அன்பையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆசிரியர் திரு.ச.மகாலிங்கம் அவர்கள் முருகனின் அருள் பெற்றவர். சமகால கிராமத்து இளைஞர்களை பக்திப்பணியில் இணைத்தவர். அவர் போதனையில் தெய்வத் திருப்பசனையில் ஊறிய மாணவர்கள் இன்றும் அதே தெய்வத் திருப்பணியில் மிளிர்வதைக் காண்கின்றேன்.

அவர்தம் அணிந்துரை இந்நூலின் அருளுரை, அமுதவுரை, அழகு உரை என்பதாக உணர்ந்து பெருமிதம் அடைகின்றேன்.

இந்நூல் உருவாகுவற்கு எனக்கு அழைப்பு விடுத்த பசுபதிப்பிள்ளை தேவநாதன்(தேவன்) அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகுக.

உசாவல் நூலாகப் பருவங்களின் அழகினைப் பேசும் இயிலினை அறியப் பயன் பட்டது அமரமுனி பகழிக்கூத்தர் எழுதிய திருப்பரங்குன்றம் திருமுருகன் பிள்ளைத் தமிழாகும்.

பிழைகள் மலிந்திருக்கக் கண்டால் மன்னிக்கவும். மறுபதிப்பில் யாவும் திருத்தப்படும். அனைவர்க்கும் மீண்டும் நன்றிகளோடு,

**அன்புடன், தீவகம் வே. இராசலிங்கம்.**

# அணிந்துரை.

## முருகமணி ச.மகாலிங்கம் ஆசிரியர்

சரவணை, வேலணை, சங்குதரை, மயிலப்புலம் மேவி அருள் பாலித்துக் கொண்டிருக்கும் முருகன், பள்ளம்புலத்து அருட் திரு முருகன்.

கந்தபுராணக் கலாச்சாரத்தை மையமாகக் கொண்டு அருளுருவம் பெற்ற முருகன், பள்ளம்புலம் பதியில் எழுந்தருளி, அடியார்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றான். கல்விக்குரிய கந்தன் பள்ளம்புலக் கந்தன் என்பதே அடியார்களின் ஆழமான நம்பிக்கையாகும்.

முருகன் அருட்பார்வையில், அருளாசியில், கவிபாடும் ஆற்றல் பெற்ற அறிஞர் பலர் அன்று வாழ்ந்தார்கள். இன்றும் வாழ்கின்றார்கள்.

திருமுறைகளைப் பண்ணுடன் ஓதி, தாம் இன்புறுவதோடு பிறரையும் இன்புறச் செய்யும் முருக பக்தர்கள் பலர் அன்றும் வாழ்ந்தார்கள். இன்றும் வாழ்கின்றார்கள்.

முருகனை நாடித் தேடிவந்து, நம்பிக்கையுடன், உள்ளம் நெகிழ வழிபடுவோருக்கு கல்விச் செல்வமும், பொருட் செல்வமும், அருளாசியும் கைகூடுமென்பது அனுபவ அடியார்களின் நம்பிக்கையாகும்.

பள்ளம்புல முருகன் மீது கவிபாடி ஐந்து நூல்களை யாத்தளித்தார் சரவணையூர் ஆ.தில்லைநாதப்புலவர்.

வித்துவான் வேந்தனார், கவிஞர் தில்லைச்சிவன் ஆகியோர் கவிமாலைகள் புனைந்து முருகனை அலங்கரித்தவர்கள் ஆவர்.

இந்த மரபு வழியிலே சரவணை பள்ளம்புலம் பதியில் பிறந்து, முருகன் ஆலயச் சூழலிலே ஓடியாடி விளையாடி, கல்வி பயின்று, முருகனின் அருள்வாக்கினையும் பெற்று இன்று புகழுடைக் கவிஞராக விளங்குபவர் திரு வே. இராசலிங்கம்(கனடா) அவர்கள்.

அவருடைய கலையுணர்வும், கவியார்வமும், முருகபக்தியும் ஒன்றிணைந்து முருகன்பால் அன்பு மீதூறிக் "குமரக்கோட்டம், பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத்தமிழ்" என்ற தெய்வத் திருநூலினை யாத்து முருகப் பெருமானுக்குச் சமர்ப்பணம் செய்துள்ளார் கவிஞர்.

இது பள்ளம்புலம் முருகன்மீது அலங்கரிக்கப்படும் கவிமாலை மட்டுமல்ல, ஈழத் தமிழகத்திற்கே முருகன் பற்றிய அருளமுதக் கருத்துக்களை அள்ளிவழங்கும்-பறைசாற்றும் ஓர் ஆன்மீக ஊடகமாகவும், ஆன்மீகம் மணக்கும் மலராகவும் அமைந்துள்ளது.

கவிஞருக்கு இந்த நுண்ணிய சக்தியாகிய கலையாற்றல் தோன்றியமைக்கு மூலம், அவர் பள்ளம்புலம் முருகன்மீது கொண்ட ஆழமான இறைபக்தியாகும்.

அவருடைய பெற்றோரும் ஆலயத்தில் நடைபெறும் கந்தசஷ்டி விழாவிலும், மற்றும் திருவிழாக்களிலும் பங்குகொண்டு பக்தி உணர்-

வோடு ஈடுபட்டு வாழ்ந்தவர்கள்.

கவிஞரோ ஆலய வளர்ச்சிக்காக பல்வேறு நிலைகளில் நின்று பணியாற்றி வந்தவர்.

இத்தகைய ஆழமான ஈடுபாடும், முருகன் மீதுகொண்ட அன்பும், பக்தியினதும் பிரதிபலிப்பே முருகன் கனவிற் காட்சி கொடுத் தார். அவரின் வாழ்வாதாரத்திற்கு வழியும் காட்டினார்.

"முருகனைக் குழந்தையாகக் கண்டு எழுதியதெல்லாம் உண்மை யானவை. அவன் குழந்தையாகவே எனக்கு இன்னமும் தெரிகிறான். அவனிடம், அவன் முன்றலில் நான் படித்தவையே எனது கவிதைப் பயணத்தின் துடுப்புக்கள். எல்லாம் அவனே" என்ற கவிஞரின் சரணாகதி உணர்வு, முருகன் மீதுள்ள ஆழமான பக்தியின் வெளிப்பாடே யாகும். இதனாற்தான் "பிள்ளைத்தமிழ்" பாட வைத்தாரோ முருகன்.

முருகன் மீது பாடிய பிள்ளைத்தமிழ் பாடல்கள் அனைத்தும், அற்புதமாக அமைந்துள்ளன. கவிஞரின் உள்ளத்தில் முருகனின் அருட்பார்வை நிலைகொண்டிருந்துதான் இதனை நெறிப்படுத்தியுள்ள து என்பது எனது நம்பிக்கை. அவரின் பாடலில் ஒன்று,

**"கந்தனொடு மிக்குறவு கண்டவடி யார்சிலிர்த்துக்**
**காலைவிடி வெள்ளி யோடும்**
**கார்குளிரிற் நீரள்ளிக் கடன்களெனத் துறையாற்றிக்**
**கந்தைபுதி தாக்கி வந்து**
**சந்ததிரு வெம்பாவைச் சாற்றியூர்ப் புகலார்த்துச்**
**சல்லாரி மணிக ளிட்டுச்**
**சரமாரி கூட்டமெனச் சாரைவளைந் தூர்வதுபோல்**
**சந்நிதிபாற் புக்கு நேரம்**
**தந்ததிருப் பதிகமெலாம் தனைப்பாடித் தீபமிடத்**
**தாங்கியருட் பேற ளித்துத்**
**தருங்கல்வி பேர்வணிகத் தாம்துறைகாண் வேராகத்**
**தந்தசிவ பால னாரே!**
**சிந்துமலி கின்றபுலத் தேரேறும் மயில்வேலா**
**செங்கீரை யாடி யருளே!**
**சிறுபிள்ளை விளையாட்டுத் தெழில்மழலை முருகேசா**
**செங்கீரை யாடி யருளே!"**

என்று முருகன் சந்நிதியில் நடைபெறும் மார்கழித் திருவெம்பா வை நிகழ்வை நேரில் கண்டு அனுபவித்த கவிஞர், தேன்சொட்டும் செந்தமிழில், தெள்ளிய நடையில், உவமைச் சிறப்புடன் எடுத்துரைக் கும் ஒரு கட்டமீதாகும்.

மேலும்,

**"அழகுபள்ளம் புலத்தீச னவனோடு விளையாட**
**அம்புலீநீ ஆடவாவே!"** என்ற அடியினை நோக்கும்போது, முருகனைத் தனது உள்ளத்தோடு, உணர்வோடு இணைத்துப்பாடி இன்புறும் ஓர் நிலையினைக் காண்கிறோம். இவ்வாறு அவரது அத்தனை பாடல் களிலும் அற்புதக் கருத்துக்கள் மலர்ந்து நிறைந்திருப்பதையும் காண்

கின்றோம்.


பிள்ளைத்தமிழை முழுமையாகப் படிக்கும் பொழுது, அவர் முருகன்மீது பிள்ளைத்தமிழ் மட்டும் பாடவில்லை, ஒரு காப்பியச் சுருக்கத் தொகுப்பே பாடியது போன்று உணர்வலைகளும் எண்ணமும் தோன்றுகின்றன.

தில்லைநாதப் புலவர், வித்துவான் வேந்தனார், கவிஞர் தில்லைச்சிவன் ஆகியோர் ஆக்கிய பள்ளம்புலக் கந்தன் கவிமாலையில், "குமரக்கோட்டம், பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத்தமிழ்" ஒரு ஒளிவீசும் முத்தாகக் காட்சியளிக்கும் என்பதில் ஐயமேயில்லை.

கவிஞர் வே. இராசலிங்கம்(கனடா) அவர்களது இந்த அரிய சாதனையைப் பள்ளம்புலம் முருகன் பேரில் நாம் போற்றுகின்றோம்!, வாழ்த்துகின்றோம்.!

ஓம். முருகா.

ஆசிரியர் ச. மகாலிங்கம்.
பள்ளம்புலம், சரவணை.



# சரவணையூர், குமரக்கோட்டம் பள்ளம்புலம் திருமுருகன் பிள்ளைத்தமிழ்

## விநாயக வணக்கம்

வேதப் பொருளாக வித்துவத் துள்நின்ற விக்கினனே
நாதப் பொருளாய நல்லாக மத்துறை நற்குஞ்சே!
போதற் குகற்காய பிள்ளைத் தமிழ்பாடப் புகுந்தேயான்
மேதக் கணபதி விண்ணப்ப மிட்டேன் மிகவருளே!

## சிறப்புப் பாயிரம்!

பாரதியாய் நின்று பணிந்தெம் பிரார்கட்குச்
சேரக் கவியாக்கும் தீந்தமிழன்-ஆரமென
பள்ளம் புலத்துதித்த பாலன் முருகனுக்குப்
பிள்ளைத் தமிழ்படித்தான் பேசு!

## அவையடக்கம்!

ஆழ நெடுங்கட லான தமிழுண்டு
வாழும் புலவர் வரிந்திழுத்துப் -பாழும்
கவியிதுதான் என்று கணக்கிதற்குப் போடார்
புவியார் தமிழென்பதாற் போ!

# 1-காப்புப் பருவம்!

## கணபதி காப்பு!

மண்கும்பான் வீரகத்தி
வாதாபி கணபதியும்
தண்ணார்இ லந்தைவனத்
தானமர்ந்த ஐங்கரனும்
விண்ணாரும் கோபுரத்து
மேற்குமுடிப் பிள்ளையும்
எண்கூட லூருற்ற
இந்தன்வி நாயகரும்
தெண்ணீர் வயற்கங்கைத்
திக்காகி வீற்றிருக்கும்
அண்ணாவி நாயகர்க்கு
அம்மூர் நடுவண்கண்
கண்ணாகி நின்றுலவக்
கந்தன் திருமுருகன்
பண்ணாரும் கோட்டத்துப்
பள்ளம்பு லத்துதித்தோன்
எண்ணும் எழுத்திசையும்
ஈர்க்கக் துணிந்தெனக்கு
நண்ணும் கவிகொடுத்து
நற்துருவம் காட்டியவன்!
மண்ணகத்தே நின்று
மருவுற்ற காதலினால்
கண்மிப் பணிந்தேத்தக்
கட்டளைகள் இட்டமகன்!
திண்ணார்ந்த பிள்ளைத்
திருத்தமிழாற் பாடுஎன
எண்ணக் கருக்குழைத்து
இன்றழைக்கக் கண்டேனே!
வண்ணமணி விக்கினரே!
வாருலகத் தத்துவனே!
கண்வளரும் கடம்பனையே
கரிமுகனே காத்திடுக!

## சிவன் காப்பு!

நாடெ லாம்புகழ் நல்முரு கானவன்
நற்றமி ழானகுகன்
தேட லாய்ஒளி சிந்திடப் பால்முகம்
திகட்டிடும் சேந்தனவன்
கூட லாம்கும ரக்கோட்ட மமர்ந்திடும்
கொஞ்சுவேள் கந்தவேற்கு
ஆட வண்டமும் அதிர்நடச் சிவபுரி
அப்பனே காத்தருளே!

கூடல் வைகையிற் பிட்டுற மண்சுமந்
திட்டசி வன்னாரே!
பாடற் பொற்கிளி பெற்றிடத் தருமியாம்
பக்தனுக் காய்நெற்றிக்
கோட முக்கணால் மூட்டிய நெருப்பிலே
குற்றமே செப்பியவா!
பாடற் பிள்ளையை பள்ளம்பு லச்சிவ
பாலனைக் காத்தருளே!

## பார்வதி காக்க!

ஆர பங்கயத் தழகிய குழந்தையை
அழகிய மயிலோடும்
சேர நின்றிடும் சேந்தனை அசைந்திடும்
சேவலார் கொடியோடும்
நூர கிண்கிணி நித்திலம் இசைக்குமோர்
நூபுரக் கந்தனையே
சூர பார்வதிச் செருத்தனை அம்மனே
செல்வனைக் காத்தருளே!

## கங்காதேவி காக்க!

கங்கையாய் உச்சிக் கார்சடை வைத்துக்
கந்தர்வ மாக்கிய சிவனார்
பொங்கிடும் முக்கண் பொய்கையிற் பதிக்கப்
பிறந்தநற் கார்த்திகை மைந்தன்
செங்கதிர் ஒப்பச் சிலிர்த்திடும் வேளை
செந்தளிர் போற்திரு மேனி
அங்கையாற் பரவி அம்மநீ மோந்து
அழகனைக் காத்திடு தாயே!

## அரிகர ஐயனார் காக்க!

வழிபட நிறுத்தி வணக்கமென் றகவி
வண்டியைத் தொடருவர் வழியோர்!
எழில்மயி லப்பு லத்தொடும் நிற்கும்
அரிகர ஐயனார்த் திறையே

பொழிலயற் பள்ளம் புலத்தொடும் முருகப்
பிரணவன் அவதரித் திட்டான்!
விழிபடர் முக்கண் வியாபகப் பிள்ளை
விக்கின மின்றிநீ காப்பாய்!

## திருமால் காக்க!

அள்ளும் உலகுக் கவதாரப் பத்துமாய் அம்கடலில்
கொள்ளும் துயில்மறைக் கோகுலன் செப்பிய கீதையினால்
உள்ளப் பிணிப்பா லொடுங்கி மனத்தொடும் ஒப்புகின்றேன்
பள்ளம்பு லத்துயர் பங்கயக் காந்தனைப் பார்த்தருளே!

திருமால் எனவும் பெருமாள் எனவும் திருமலையின்
குருவே எனவும் அருவே எனவும் குழையமனம்
பொருளே எனவும் புகழே எனவும் பொழுதுரைத்தேன்!
கருவாய் உதித்த முருக மழலையைக் காத்தருளே!

## உமையவள் காக்க!

சுப்ர மண்யப் பெருந்தகையான்
சொர்ணக் குடிலாய் அரங்கேற்றும்
தெப்பக் குடிநீர் வயலார்க்கும்
சிந்தார்க் குமரக் கோட்டத்தில்
சிப்பா யாக வந்தமர்ந்தான்
தெய்வக் குழந்தை வேல்முருகன்
அப்பா போலே உமையவளே
அப்பன் முருகைக் காத்திடுக!

## காளி காக்க!

கொக்கு மரக்கிளி குருவி புறாக்களும்
கொண்டு வளையாடும்!
பக்கம் படத்தொடு பாம்பு நடமிடப்
பார்த்து விளையாடும்!
அக்கம் பக்கமும் அண்டா திருந்திட
அம்மா காத்திடுவாய்!
செக்கச் செவேல்எனும் சின்ன முருகனை
செந்தழல் காத்திடுவாய்!

## இந்திரர், தேவர்கள் காக்க!

கஞ்சமலர் வந்தாடக் கார்கடலும் நின்றாடக்
காதல் கொள்வான்!
நெஞ்சமெலாம் குறும்பாட நிசியிருட்டும் கிண்கிணியாய்
நினைக்கச் செய்வான்!
பிஞ்சுமனத் துதிப்பார்கண் பின்தோன்றி முன்மறையும்
பிள்ளை யாண்டான்!
அஞ்சலென விந்திரரே அமரருல கத்தோஷர்
அணியாய்க் காப்பீர்!

## தில்லைநாதப் புலவர் காக்க!

பள்ளம்பு லப்பதி பற்றவ சைந்திடும்
பாலநற் குமர னார்க்குத்
துள்ளிப் பரவியே தோத்திரம் சாற்றிய
தில்லைநா தப்பு லவீர்!
கொள்ளைந றுங்கவி கொண்டுவ ணங்கிடக்
கோலமயி லோடு வந்து
அள்ளித்த ரும்தமிழ் அழகனை யம்புலத்
தையனைக் காக்கு கவே!

## அகத்தியர் காக்க!

அம்தமிழ் ஆய இலக்கணம் செய்தீர்
அகத்திய மாமுனி அய்யா!
எம்தமிழ் முருகன் இன்றலர் பொய்கை
இருப்பிலே வந்தவன் தன்னை
செம்மொழித் தூய இயலிசை கொண்ட
சிங்கார முத்தமிழ்ச் சேயை
வெம்புயல் ஆக விட்டிடாய் தென்றல்
விளைதரு வேலனைக் காப்பாய்!

(வேறு)

அகத்திய மாமுனி ஐயநின் கோவில்
அகம்குளிர் ஈழத் தணிசம் பூரில்
இருந்தமை கண்டோம்! இப்பொழு தெல்லாம்
உருவழித் திட்ட ஒருநிலை உண்டாம்!
கமண்ட குண்டலக் கைத்தொடு நீரைச்
சுமந்து கங்கையாய்ச் செப்பிய நாதா!
நீவந் தமர்ந்த நித்தில மண்ணில்
பூவந் தாடும் பள்ளம் புலத்திலே
கோவில் அமைக்கக் குமரன் பாலனாய்
உருவம் தரித்துப் பருவம் பிஞ்சாய்
செருதமிழ் வேலோன் சிரித்தான் காணாய்!
முருகு பிள்ளையின் பிள்ளைத் தமிழை
உருகிப் பாடி உன்தமிழ்க் களித்தேன்!
இலக்கணம் தந்த எம்மகத் தியனே
அலகில் முருகனை ஐயநீ காப்பாய்!

**காப்புப்பருவம் முற்றிற்று.**

# 2-செங்கீரைப் பருவம்

திங்கள் உலவச் சேல்புரளும்
தெண்ணீர்ச் சுனைக ளூராகத்
திருவும் தமிழும் திகழ்புலவோர்ச்
செந்நாப் போதர் திறம்பாடத்
தெங்கும் பனையும் தோப்பாரச்
செல்வப் பயிர்கள் திறைசேர்க்கத்
தேவார்ப் பணிப்பார், ஓதுவரும்
திருப்பாப் பொழிப்போ ருரைசொல்லப்
பொங்கும் குமரக் கோட்டம்என்
புகழார் பள்ளம் புலத்தொடுவாழ்
பெருமான் சிவனார் திருக்கண்ணாற்
பொய்கை யுதித்த சரவணனே!
செங்கை அவிழச் சிறுமுகையார்
சிரிப்போ டாடாய் செங்கீரை!
சிந்துத் தமிழி னிசைமேவச்
செவ்வே ளாடுக செங்கீரை!

சிறுகற் புளித்து வயல்செழிக்கச்
செந்நெற் கதிர்கள் வளைந்தாடச்
செம்மா துளையும் மாவாழைச்
சிறப்பார் பள்ளம் புலத்துறைவோய்!
உறுதுன் பத்துள் இமையவர்கள்
உக்கிப் பொருமும் சிறைமுடித்து
உம்பர்க் கருளப் பிரானார்கண்
ஒளியில் பிறந்த திருமுருகா!
அறுநற் கமலக் கார்த்திகைப்பெண்
அங்கை தன்னில் மலர்வோனே
ஆடு களத்துட் மாவசுர
அம்பிற் தோய்ந்த மாயமெலாம்
குறுகத் தறித்து வதம்செய்த
குமரா வாடாய் செங்கீரை!
கொடுமை வெல்லும் பரணிக்கார்
குழந்தாய் ஆடாய் செங்கீரை!

**வேறு**

மேல்நடுசேர் இரவினொடு வெருடசோலைக் கருமிருளாய்
மிதமுறையும் முகத்தெ ருக்கண்
மேவிடத்தீ ருருளிபற்றி விரைவார்கண் செவிபுக்க
மூலத்துள் மணியொ லிக்கும்!
வேல்முரு கானவர்தம் விளையாட்டில் மெய்சிலிர்ப்போர்
விடியற்பின் னுரைதெறிக்கும்!
பின்னாலே வருமொருவர் முன்னாகக் காணுமுன்னே

விரைந்ததுவும் கதையி ருக்கும்!
சேல்வயலூர் நீர்ததும்பச் சேர்வயலிற் களைகெல்லிச்
சேயிழையார் பாட்டி சைப்பத்
திருமுருகப் பண்குழுமித் தெங்குபனைப் பயிர்க்கூடற்
சிந்துதமி ழாற்தெ றிக்கச்
சூல்காவச் சூரியன்போல் சிவன்கண்ணிற் றுதிபெற்றோய்
செங்கீரை யாடி யருளே!
சிறுபிள்ளை விளையாட்டுத் தெழில்மழலை முருகேசா
செங்கீரை யாடி யருளே!
***சூல்காவ-அணுவெடியாய்**
கந்தனொடு மிக்குறவு கண்டவடி யார்சிலிர்த்துக்
காலைவிடி வெள்ளி யோடும்
கார்குளிரிற் நீரள்ளிக் கடன்களெனத் துறையாற்றிக்
கந்தைபுதி தாக்கி நின்று
சந்ததிரு வெம்பாவைச் சாற்றியூர்ப் புகலார்த்துச்
சல்லாரி மணிக ளிட்டுச்
சரமாரி கூட்டமெனச் சாரைவளைந் தூர்வதுபோல்
சந்நிதிபாற் புக்கு நேரம்
தந்ததிருப் பதிகமெலாம் தனைப்பாடித் தீபமிடத்
தாங்கியருட் பேற ளித்துத்
தருங்கல்வி பேர்வணிகத் தாம்துறைகாண் வேராகத்
தந்தசிவ பால னாரே!
சிந்துமலி கின்றபுலத் தேரேறும் மயில்வேலா
செங்கீரை யாடி யருளே!
சிறுபிள்ளை விளையாட்டுத் தெழில்மழலை முருகேசா
செங்கீரை யாடி யருளே!

ஆநெய்யி லகல்விளக்குத் தளிக்கும்பொற் சுடர்மேனி
யருள்மேவும் குழந்தை வேலா!
அடர்மேய்ந்து பசுவளிக்கத் தயிர்பாலும் முப்பழத்தும்
அகங்குளிர்நீ ரருவி யாடிப்
பூநெய்யப் பட்டாடைப் பூந்துகிலிற் பொன்மேனிப்
பொலியுநுதற் சுட்டி யிட்டும்
பொங்கிவரும் அமுதமொடு பழம்பாக்கு வெற்றிலைகள்
பூமாலை சூட மிட்டுப்
பாநெய்து உனைத்தொழவே பக்தர்வந் தலையாடும்
பதிபால சுப்ர மண்யா!
பக்தகதிர் காமமொடும் பதிநல்லைக் குமரனென்றும்
பலபெயருக் குகந்த சீலா
சீர்நெய்யும் கீர்த்திகா செம்பதியின் செந்தூரா
செங்கீரை யாடி யருளே!
தென்பொதிகை மன்றுவரத் திருத்தமிழா யானவனே
செங்கீரை யாடி யருளே!

தமிழ்வாழுந் திருவூரிற் றண்ணருளின் பதியூரிற்
தரித்துவாழ் கார்த்தி கேயா!
சரவணையூர் வேலணையூர் சார்மயிலப் புலமென்றும்
சங்குதறை மேவி வாழும்
குமிழ்கின்ற பெருஞ்சாரற் பெரும்பள்ளப் புலத்திலுறை
கீர்த்திபெறு வெற்றி வேலா!
கோலமயில் வாகனமாய்க் கூம்சேவற் கொடியசையக்
குமரனுக்கார் கோட்ட மென்றே
அமிழ்தென்னத் திருக்கோவில் அருள்கின்ற வரமாளும்
அய்யசிறு கிரித்தி கன்உன்
அடியார்கள் பற்பலவாய் அகம்கூடத் திருப்பணியால்
அழகாகி யருளு கின்றாய்!
சிமிழலகார் செம்பவளத் திதழ்கமழும் சிவபாலா
செங்கீரை யாடி யருளே!
சிறுகையாற் றிசையுருட்டித் திசையார்க்கும் அம்மூரா
செங்கீரை யாடி யருளே!

**வேறு**

தண்க ரத்தொளிர் தங்கப் பதுமையென்
சார்ந்த முருகோராய்ச்
சண்ப கத்தொடும் தளிர்ச்செவ் வரத்தையும்
சாந்துப் பொடிதூவப்
பண்பு லத்திகழ் பள்ளம் புலத்தெழில்
பார்த்து நடமாடிப்
பச்சைப் பயிர்வகை பாடி வளைந்திடும்
பங்கிற் குழைந்தாடிக்
கொண்டு வெண்ணுடை கோலக் கல்வியிற்
குழந்தை கள்மேவும்
குமரக் கோவிலுன் மருதத் தெருவிலே
குந்தி யிருந்தாடி
சென்மை மிகுந்தபொற் றெய்வச் சரவணா
செங்கோ செங்கீரை!
தில்லைப் புலவர்தம் திக்கில் இருப்பவா
செங்கோ செங்கீரை!

கூறு திருப்புகழ் கூறும் சொற்றவிழ்
சுகித்தும் மயில்வீரா!
சொல்லும் பயனொடும் சிக்கி முகத்தெழில்
சிந்தித் திருக்கோலம்
நூறு வகைதரத் தூறும் தமிழெழத்
தொன்மை நிலம்பாடத்
நுண்ணார் சைவமாய் நூற்கும் பொற்குவைத்
திருநாள் பலபார்த்துத்

தூறு கின்றனை தின்றன் அடிதொழத்
தூறு களைந்திடுவோய்!
உக்கும் நோய்படத் தூர்வார் மாறிடத்
துள்ளம் ஒளியாக்கிப்
பேறு கொடுப்பவா பிள்ளைக் குமரனே
செங்கோ செங்கீரை!
பொங்கும் கருணையின் புத்தேர் ஓவியா
செங்கோ செங்கீரை!

**வேறு**

திக்குகள் அதிரத் துறுபயம் உருளத்
தினம்தினம் வருந்திடத் துள்ளம்
திசையறி யாதார் துன்பமுற் றுளல்வார்
துக்கிடும் போதிலே வந்துன்
சொக்குகள் அளாவித் தெண்டனிட் டுரைக்கச்
சிறுமுகை உற்றுநின் னடியார்
செப்பலுக் கிரங்கி அற்புதம் புரியும்
செல்வமே சந்நிதி வேலா!
மொக்குகள் நீவித் துக்குகள் நீக்கும்
முருகனே சரவணப் பொய்கை
முற்குளக் கமல முத்தொடும் மலர்ந்த
மொய்குழற் பாலகா செந்தேன்
சொக்கிடும் திருவாய் சிந்திடும் குமரச்
செல்வமே யாடுசெங் கீரை!
தினம்தினம் தமிழ்ப்பா தூறிடத் தருளும்
திருமணி யாடுசெங் கீரை!
**(செங்கீரைப் பருவம் முற்றிற்று)**

# 3-தாலப்பருவம்

கன்னற் பசுமைக் கவிகேட்டுக்
கனியக் கனிய கனிந்துசிறு
கஞ்சப் பிஞ்சுக் கரமசையக்
களித்துக் களித்துக் கடல்நடுவிற்
றென்னைத் துரத்தித் திருவமுதம்
தெவிட்டத் தெவிட்டத் தூட்டிநறும்
தேனிற் குழைத்த தீந்தமிழைச்
செப்பித் திரிய வைத்தவனே!
அன்னப் புட்கள் பறந்துலவும்
அம்பொற் புலத்துக் குடிலாகி
அழகிற் கொருவ னெனத்திகழ
ஆய கலைகள் அளித்திடுமோர்
சின்னச் சிமிழே சேய்முருகா
திருவே தாலோ தாலேலோ!

சிந்தும் பசனைச் சுவைமாந்தும்
செவ்வேட் குயிலே தாலேலோ!

கன்றைப் போலும் கார்ததும்பும்
கடப்ப மலர்முத் திதழ்ததும்பும்
காலைப் பொழுதாய் முத்துதிரக்
கதைக்கும் குமரா உனதுமொழி
ஒன்றி ஒன்றித் தெள்விளிபோல்
ஊருக் கெல்லா மொலிக்குமணி
உசுப்ப உசுப்ப நீயசைந்து
ஒளிரும் சுடரா யுட்புலரும்
தென்றற் குரலாய் திக்கெல்லாம்
திரட்டி உரைக்கத் துன்னடியார்
செல்வா வேலா எனப்புகலத்
தினமும் கூற வைகறையின்
முன்றற் கதிர்கொள் திசைபார்க்கும்
முருகா தாலோ தாலேலோ!
முல்லை மல்லி கைவாசம்
முகர்வோய் தாலே தாலேலோ!
*** தெள்விளி-இசைப்பாட்டு**

ஊனும் உயிரும் கலந்துதரும்
உணர்வுக் கொழுந்தே! யொழுகும்பால்
உலவும் பசுக்கள் நிலம்நனையத்
தூறும் வளத்திற் புலம்நின்று
தேனும் பாலும் சுரந்துவரும்
திசைமா மடியிற் சாய்ந்துநிதம்
துரவும் பயிரும் இரும்பச்சைச்
சிறகாய்ப் பரந்து அகன்றதொரு
கானும் கதிரும் தலைசாய்க்கும்
கமத்துட் டுலவி கடுமுழைப்பில்
கன்றும் மாந்தர் வியர்வைப்பால்
கனிந்த பரப்பில் கண்பதியக்
கோனாய் அமர்ந்த சிறுமழலைக்
குகனே தாலே தாலேலோ!
கொஞ்சும் தமிழைக் கேட்டயரும்
குழந்தாய் தாலே தாலேலோ!

வண்டுங் குருகும் வளைந்தாடி
மயங்கும் பொழிலின் மருங்குறையும்
வடிவே! செஞ்சொற் றலைபாயும்
மழலைச் சிறுவாய் மலர்ந்தொலிப்ப
வண்ணங் கலந்து ஓவியம்போல்

வர்ணக் குழம்பாய்! வைரமொடு
மணியும் முத்தும் மருங்கசைய
மயிலும் குயிலும் வாழ்த்துரைக்கச்
சொண்டும் இதழும் வயற்கிளிபோல்
சிந்தும் புகல்வாய்ச் செவ்வேளோய்!
திருவார் புகழும் தீந்தமிழும்
செறியக் கந்தக் கலிதருவார்
கண்டு களித்தங் கருள்கொடுக்கும்
கரும்பே தாலே தாலேலோ!
கந்தத் தொடுவாழ் மக்களொடும்
கதைப்பாய் தாலே தாலேலோ!

வறுமை புகினும் மறைகல்வி
வனப்புக் குறையா மருங்கர்தம்
மனதுட் புகுந்து உருவேற்றும்
வடிவேற் சிறுவா உனைத்தொழுது
பெறுபொற் புள்ளி பெருப்பற்றிப்
பெறுவார்க் குகந்த பணிகாணப்
புகலும் சிறுவா! பெருமருளிற்
புகழ்ந்து துதிக்கத் துன்கோவில்
அறுகம் வீதி அடிநுழைந்துன்
அகத்தே புகுந்தா ருரையாடி
அகலும் காட்சி கண்டுணரும்
அழகா! கார்த்தி கைவேலா!
நறுநெய் விளக்கு நாயகனே
நந்தா தாலே தாலேலோ!
நன்றே துதிப்பார் நலம்திகழ
நன்றே யளிப்பாய் தாலேலோ!

தேவார் பதமும் திருப்புகழும்
செப்பிச் செப்பிச் சிறுமுருகைச்
சிந்தும் குரலால் திறம்பாடித்
தொழுவார் வந்து கூடுங்கால்
மோவாய் திறந்து தேன்தமிழை
முருகா கேட்டு மொய்யுங்கால்
முகிழ்வாய்ப் புரக்க மறைபுகலும்
மெய்யா ரடியார் பதமுரைக்க
நாவாய் போலே கலங்கரையாய்
நாடி வருவார்க் கருள்புரிவோய்!
நம்பா செம்பொற் சரவணத்தெம்
நதியிற் றுதித்த நறுமுகையே
கோவே குமரக் கோட்டத்துக்
குழந்தாய் தாலே தாலேலோ!

கொஞ்சும் தமிழே! செம்மழலைக்
குஞ்சே தாலே தாலேலோ!

### வேறு

பேரொளி முக்கணச் *சூலாயி ரங்களாய்
பொங்கிடும் போதுதிக்கப்
பீறிடும் வெந்தணல் வேகிட வாயுவும்
விட்டிட அக்கினிக்கை
வாரொளி தாங்கிடும் வாதையா லெற்றிட
வந்தாய் சரவணத்தெம்
வற்றாக் குளிரொடும் வாரிடும் பொய்கையில்
வண்ணக் கமலமதிற்
சீரொளி பெற்றிடச் சீதள மாகிடச்
சிரித்தாய் திருமுருகா!
பெய்வளைக் கார்த்திகைப் பொற்றொடிக் கைச்சிறை
பெற்றாய் மால்மருகா!
தாரொளி குன்றிடாத் தங்கமே சிந்துரா
தாலோ தாலேலோ!
ததும்பும் மழலைத் தமிழைத் தருபவா
தாலோ தாலேலோ!

*** சூலாயிரங்களாய்-ஆயிரமாயிரம் அணுவெடியாய்**

வேராடு துன்பமார் வேதனை வாழ்விலே
வீழக் கண்ணீரால்
விக்கிக் குளறவும் வீற்றாய்ப் பதறவும்
வீழ்ந்திட வுன்காலிற்
நாராகிக் கெட்டு நலிந்து அலமந்து
நாயாகி நின்றவேளை
நம்பிடும் உன்னைநாம் நம்பிடா தேசினோம்
நம்பிநீ சீறாதே!
சாராடு சோதியைச் சத்தியப் பாலனைச்
சாடினோம் மாறாதே!
சடங்குக் கிடமின்றிச் சாவொடும் போராடிச்
சாற்றினோம் கேளாதே!
தூரோடு வல்வினை தூக்கிடும் வேலவா
தாலோ தாலேலோ!
துய்யதாய் வெய்யநாள் தீர்த்திடும் பாலனே
தாலோ தாலேலோ!

### வேறு

முத்தே மணியே
முழுநிலவே மாணிக்கமே!
மொய்யார்த் தொடுதரளம்
முகிழ்க்கும் சிறுமுகையே!

கத்துங் கடலே
கடற்றோய் மதியொளியே
கனக மலர்மாலைக்
கப்ப லமர்ந்தவனே!
சித்தெங் கடந்துருகச்
செங்கவியாய் ஆர்ப்பவனே!
தேயாப் புலவர்தம்
தில்லைநா தர்க்கருளிப்
புத்தகங்க ளானவா!
பெருங்கவிஞ ரூர்வாழ்த்தும்
தத்துங் கனியமுதே
தாலோ தாலேலோ!
தாழ்ந்து பணிந்தருளும்
தங்கமே தாலேலோ!

தெள்ளமுதே! தேனே!
திருச்செந்தூர், நல்லூர்த்
துருவத்தும் தேன்கனடாத்
தேசமெலாம் கோவிலொடும்
அள்ளவீற்றி ருக்கின்ற
அற்புதா! பச்சையெழி
லன்னவயல் சூழ்ந்திருக்க
அம்புட் பறந்துலவும்
பள்ளம்பு லத்தொடுவாழ்
பைந்தேன் கிருத்திகனே!
பாலா! திருப்புகழின்
பண்ணே! யனுபூதி
துள்ளும் தமிழ்வேலா
தாலோ தாலேலோ!
தேரோடு கின்ற
திருமுருகா தாலேலோ!

(தாலப்பருவம் முற்றிற்று)

# 4–சப்பாணிப் பருவம்

செம்பவளப் பொற்காப்புச் சிந்தார்த்து வந்துவிழச்
செஞ்சாந்து கொண்டநுதலும்
சுடர்வண்டு விழியாடச் சிறுபாதத் தொடையாடத்
தென்றல்போ லாடுகரமும்
அம்புவடி பட்டதுபோல் அம்மிதழைத் தொட்டதுபோல்
அஞ்சிமொழி கின்றவடிவும்
ஆரூர்பள் ளம்புலத்தி லமர்ந்தபடி யூர்ந்துமன
வட்டியிலே வந்தகுகமும்
செம்புருட்டத் திருகைகள் சேர்ந்துசேர்ந் துற்றபதம்
சுதிதாள மிட்டுவரவும்
சிங்காரப் பொன்வதனத் துள்நடன மிட்டபடி
சேருமொளி பெற்றமுகமும்
தும்பியென்னப் படபடென்று தொடரவரும் சேல்முருகா
சப்பாணி கொட்டியருளே!
தென்தமிழு மென்கவியும் பிள்ளையினைப் பாடிவரச்
சப்பாணி கொட்டியருளே!

அம்படுக்கை நீயிருக்க அஞ்சமனம் நாமிருக்க
அலங்கநித மானபிறகும்
ஆரிருக்கா ராரில்லை அடிவதைக ளுதைபாடு
அங்குமிங்கு மானபிறகும்
கும்பிடவே மக்களிலாக் குறையோடு றுங்காலம்
கொண்டிருந்த போதுமதும்,
குழையோடும் சருகோடும் கூடநின்ற வூரினிலே
கூட்டமெனப் பிய்ந்தோடத்
தும்பென்றும் தடியென்றும் துள்ளென்றும் வெளியென்றும்
துவளவலி வாழ்வுவந்தும்
தொல்வினைக ளுற்றபடி தொட்டபுலம் வந்துநின்று
தேவாரம் புகலுகின்றோம்!
அம்புவெனத் தைத்தமனம் அகற்றிவிடத் திருமுருகா
ஆடுகநீ சப்பாணி!
அலரோடும் புதரோடும் ஆனநிலம் மாறிவரத்
தருளாடு சப்பாணி!

போரெழுந்த காலமதில் புலம்பெயர்ந்த போதுமுந்தன்
பிஞ்சுமனம் கொண்டுநின்றோம்!
பூரித்த மனம்நொந்து பிறப்பாரூர் மறக்காமல்
பூசித்த படியுறைந்தோம்!
நீரழுத்தும் வயல்மருங்கில் நெடுஞ்சுனையு மருதமுமாய்
நிசம்பூத்த தமிழூரிற்
நித்திலத்து மணிகேட்க நின்வதனப் படியுரைக்க

நேர்நின்ற மனிதரோடும்
பேரழுத்தத் துட்பிறகும் பெருங்கோவில் நினதருளால்
பொற்தேரு மோடவைத்துப்
பிஞ்சுமன மஞ்சலெனப் பூவுனக்குச் சாந்திநின்று
பெருங்கவலை போக்குகின்றோம்!
சூரழுத்தும் படிவாழ்வுக் குறைபோகக் குமராநீ
கொட்டுகவே சப்பாணி!
குவிகடப்பும் குமுதமுாய் கோலம்பு திதாக்கிக்
கொட்டுகவே சப்பாணி!

எத்தனைதான் வந்தாலும் எத்தனைதா னுழன்றாலும்
இன்பமுகம் தெரியுதையா!
இருகைக ளோடசைந்து இடுகின்ற சப்பாணி
எவ்வுலகும் கேட்குதையா!
மத்தளங்க ளொத்திசைக்க மால்மருக வெனப்பாடி
மகிழ்ந்ததொரு காலமின்று
மறுபடியும் ஆற்றிவர மழலைமுரு கானவற்கு
மம்புரிக ளியக்குகின்றோம்!
கொத்தளங்கள் மாடிமனை கொண்டிலங்கா திருந்தாலும்
கும்பிடவே வருகின்றோம்!
கும்பமொடு மந்திரங்கள் கொண்டுசிவச் சாரியர்கள்
கோமமிடப் பாடுகின்றோம்!
நித்தமிடும் தமிழ்வாழ்வு நிசம்பாடக் குமராநீ
நின்றாடு சப்பாணி!
நெறிவாழ்வு பிசகாத சமுதாயம் ஒன்றுக்காய்
நீயாடு சப்பாணி!

இந்துசமுத் திரத்திலங்கு மிலங்கைவட பாலின்பால்
எழிற்பூமி யொடும்தீவு
ஏழிலொன்றாய் வேலணையூ ரிருக்கின்ற சரவணையிற்
ஏரார்பள் ளம்புலத்துள்
கந்தனெனும் பாலகர்க்குக் கனிந்துலவு மொருவீடாய்க்
காண்குமரக் கோட்டமொடும்
கடிமணமு மருள்நிதமும் கவலையொழி கின்றமுகக்
காட்சியென மஞ்ஞையொடும்
வந்தருளும் வடிவேலா! வாய்பேசாக் குருபரர்க்கு
வளரகவை ஐந்ததனில்
வரமிட்டுப் பூமேவு மெளனச்சொல்ல வைத்தருளி
வண்ணமொழி பேசவைத்துச்
சந்தகவிக் கந்தகலி சாற்றுவித்த செந்தூரா
சப்பாணி கொட்டியருளே!
சண்பகனே மந்திரத்துட் சதிராடும் கைவேலா
சப்பாணி கொட்டியருளே!

**வேறு**

ஆடுது லாவொடும் அணிநிலாத் திரவோடும்
அள்ளுநீ ரிறைக்கநிலம்
ஆகுப யிர்பொழில் ஆக்கிம கிழ்ந்தவர்
அன்றுப ரம்பரையாய்
தேடுசெல் வம்கொளி ரில்லமும் பொற்குவை
திளைத்தப ழங்காலம்
துளைத்திடும் பூதமும் துரவொடும் வந்துநின்
றுறுத்திய போதுவெலாம்
பாடுமு ருகர்க்குபா படித்துமே வழுத்திடப்
பண்டுறப் பேய்களெலாம்
பறந்திட வைத்தனை பள்ளம்பு லத்துவாழ்
பாலக சுப்ரமண்யா!
ஊடுவ லிய்யிடும் எம்கலி போக்கிநீ
இயற்றுக சப்பாணி!
இன்றலர் பலபிணி ஓடிடச் சண்முகா
இயற்றுக சப்பாணி!

தேவவ லிய்யற சூரவ தம்செய
சிவனாறு மணுவெடியாய்
திருக்கணி லேவிட வாயுவு மக்கினி
தொட்டிட முடியாமல்
காவலர் பொய்கையிற் கமலமார் சரவணக்
கார்குளிர் பெற்றாறு
கார்த்திகைப் பெண்களின் கைகளில் தவழ்ந்தவா
கனிகுழந் தைவேலா!
பூவல மெடுத்துநீ பொங்குபள் ளம்புலப்
பொற்தல முறைந்தபாலா!
பிள்ளைத மிழ்பாட விடுபேய னெனக்கருள்
புகட்டிய தமிழவேளா!
மேவலர் நற்கவி மிதந்தரும் சேந்தனே
மீட்டுக சப்பாணி!
மெய்யவ லம்வரும் மின்னணிச் சண்முகா
மீட்டுக சப்பாணி!

ஆடுக ஆடுநீ ஆடுக மண்டல
மாகநீ சப்பாணி!
அய்யசே வற்கொடி அசைந்திட மயூரநீ
யாடுக சப்பாணி!
கூடுக லைந்திடக் குவலய முஞ்செறி
கூடுக ளாயிடினும்
கொஞ்சுநி லப்பதி அஞ்சலென் றேயமர்
குமரகோட் டத்தினோடும்

பாடுக வென்றிடப் பக்கம மர்ந்திடும்
பக்தரும் பால்பழமும்
பாக்குடன் வெற்றிலை படைத்திடு வமுதமும்
பங்கிடு கின்றகுகா!
ஏடுக ளும்தரும் இன்முகச் சரவணா
இயற்றுக சப்பாணி!
இனமொடும் துயர்களைந் தெங்குமே யின்பமாய்
இயற்றுக சப்பாணி!

பார்வதி செருத்தனைப் தேவியாள் பார்க்கவும்
பைரவர் பதிபலவும்
பங்குக்கு அண்ணரும் பகர்முடிப் பிள்ளையும்
பயிர்ப்புல வையனாரும்
சேர்பல மாகிடத் துறையுறு நிலத்தொடும்
திருமணித் தொலியறையும்
சீர்மரு தம்முறைச் செல்வபள் ளம்புலச்
சிற்பர னென்கரத்தோய்!
கார்மழை நிறைத்திடக் கடுமுழைப் பானகை
கண்டிடும் கோட்டமென்கும்
கனிநெலும் தென்னையும் கைவரப் பெற்றநல்
கற்பகத் தூரிலுள்ளோய்!
பூர்வசென் மத்துளே பெற்றநற் தெய்வமே
புரிந்திடு சப்பாணி!
புகலவும் பாடவும் பேரரு ளாக்கிடப்
புரிந்திடு சப்பாணி!

**வேறு**

மேலொரு பாத முங்கீழு மொன்றாய்
மிதந்துப திந்திட வாடும்
மென்கரத் தொன்றும் மீக்குற வொன்றும்
மின்புற வின்புறத் தாடும்
நூலொடும் புகலும் நின்புக லலம்பும்
நிகரிலாக் கலம்பகத் துள்ளும்
நினைத்தொழக் கந்த சஷ்டியும் பாடும்
நின்னவர் வைகலும் காணும்
சேலொடும் விழிக ளஞ்சிறைத் தும்பிச்
சிறகடித் திடவுமாய் நிற்கும்
சிந்திடும் கருணைத் தந்தருள் பொலியச்
செப்பிடு மொளிமுகம் தோன்ற
வேலொடு வீரம் விளைத்திடும் பாலா
மீட்டுக மீட்டுசப் பாணி!
மேவுமார் மயிலும் வெழில்நடம் பயில
மீட்டுக மீட்டுசப் பாணி!

**(சப்பாணிப் பருவம் முற்றிற்று)**

# 5-முத்தப் பருவம்

முத்துப் பவளம் மொய்த்தகரம்
முன்பின் னசைய முகம்மலர
முகிழ்க்கும் கனிவாய்த் திதழ்மலர்ந்து
மோகத் தமிழு முதிர்ந்துவிழத்
தொத்தும் உருவாய்ச் சிகைபரப்பி
தெய்யத் தெய்யோ தெய்யவெனத்
தெப்பம் அலைபற் றுயர்வதுபோல்
தெம்புட் சிறகார்ச் சிறுமுருகுன்
பித்துப் பிடித்த பொன்மழலைப்
பூக்கள் குலுங்க மென்கவியும்
பெய்யு மனத்துட் பொழிகங்கை
விழுமார் ஆடிப் பெருக்கென்கச்
சித்தம் பொலியும் சண்முகனே
செல்வ முத்தம் தருவாயே!
சொத்துட் டதுபோற் சொத்துண்டோ?
செல்வ முத்தம் தருவாயே!

கக்கத் துடனே புத்தகமும்
கழிக்கும் பொழுதும் கல்வியெனும்
காலத் துறைந்து உன்னிழலில்
கற்றோர் பல்லோர்க் கருள்புரிந்தாய்!
திக்குத் தெரியாத் துறைநீளம்
தேர்ந்த வறிவுத் திசையாக்கித்
திடுமார் வழியைச் சிறிதாக்கிச்
செய்தா யகத்தே யானறிவேன்!
சிக்கிக் கொடுவாய்ப் பற்குளிந்து
சிதறும் உம்பர்த் துயர்தீர்க்கச்
சீறும் கனலாய்ச் சிவனார்க்கண்
சோதிப் பொறியிற் றுதித்தவனே
துக்கப் புயல்வாய் அகன்றுவிழத்
திருவாய் முத்தம் தருவாயே!
தேனே அமுதே மணிமுத்தம்
திகட்டத் திகட்டத் தருவாயே!

செம்புட் கருகிப் புல்கருகிச்
சுண்ணம் இன்றிச் சாவுடலம்
செல்கால் இடறச் செறிபோரின்
சிக்கித் திரிந்தோம் புலமெங்கும்
கொம்புட் பழுத்த பழமென்கக்
கூடும் இனத்துட் டொருதீர்வு
கொஞ்சும் என்றே உனைநினைந்து

குழந்தைப் பாவு மிடுகின்றோம்
அம்புட் குருகு பறந்துலவத்
தணிபள் ளம்பு லத்துறைந்து
அருளும் முருகர்க் காயுந்தன்
அகவல் பனுவல் புகல்கின்றோம்!
தும்பர்த் துயரம் தீர்த்தவனே
துயர்போம் முத்தம் தருகவே!
துஞ்சும் அஞ்சும் எமையள்ளத்
தூக்கி முத்தம் தருகவே!

**வேறு**

பறாளையூர் முருகற் பள்ளும்
பார்நல்லைச் சுப்ர மண்யர்
பாதமிழ்ப் பிள்ளைப் பாவும்
பரவுசந் நிதியார் பாட்டும்
புறாவெழுந் தழகு செய்யப்
புன்முகங் குதிரை நீங்கப்
புரிந்தமா விட்ட மண்ணும்
வெருகலும், உகந்தை, மண்டூர்
நறாவுதேன் கதிர்கா மத்தும்
நல்லசம் மங்கோட் கந்தும்
நாடுபல் லாவு முந்தன்
நாமத்துட் பரவி நிற்கப்
பெறாதவோ ரிடமென் றில்லாப்
புகலுடாய் முத்தம் தாராய்!
பூந்தமிழ் பரந்து போற்றும்
புதல்வனே முத்தம் தாராய்!

பெற்றதாய்ப் பூமி யெங்கும்
பெய்குடில் எல்லாம் விட்டோம்!
பூம்பயிர் செய்கை நாற்றுப்
புலமெலாம் விட்டோம்! போரில்
உற்றதாய்ப் பல்லோர் விட்டோம்
உயிரொடும் உறவு விட்டோம்!
ஒவ்வொரு வூரும் இந்துக்
கிறைகுடி லழிய விட்டோம்!
நற்றவப் பொறைகொள் பூமி
நாயினும் கேடு கெட்டு
நலிந்திட நலிந்து மக்கள்
நாளெலாம் நிற்கப் போமோ?
உற்சவப் புதல்வா இந்த
உறும்வதை இனியில் லாமல்
அற்புதம் தரவே வந்து
அன்னைபோல் முத்தம் தாராய்!

தாவெனும் போது அள்ளித்
தந்தனை! சிவனார் பிள்ளைத்
தங்கமே! மஞ்ஞை வாசா!
தாளசல் லரிக ளோடும்
பூவெனும் முருக நாமப்
புகழ்,கலி கவச மிட்டும்
போற்றிடத் துதித்த வூரார்
புத்திரர் பலபேர் உன்னைத்
தேவெனத் திரிந்து பாடித்
தேரடி பின்னே நின்று
செப்புதே னருவி யாடித்
தெளிந்தனர்! யானு முன்னைத்
தாவெனத் துருகு கின்றேன்!
தமிழவா முத்த மீவாய்!
தந்தியேற் குறைந்தா போவாய்!
தமிழவா முத்தம் தாராய்!

சோமசுந் தரப்பு லவர்
சேர்கண பதிப்பிள் ளையார்
சொல்நாவ லர்உம் சொக்கன்,
செந்தியும் வேந்த னாரும்!
ஓமவை குண்டப் பாவார்
உட்கவி தில்லைச் சிவனும்
உருத்திர மூர்த்தி, ஐயாத்
துரை,நீலா வணனும் இன்னும்
நாமமும் காரைசுந் தரனும்
நல்லமு ருகையன், தில்லை
நாதனார் போல்போல் நூறாய்
நயந்தவெண் சங்கத் துள்ளே
சேமமாய்த் தமிழாய் நின்ற
சுந்தரா முத்தம் தாராய்!
சேரவார் பிள்ளைப் பாட்டுத்
தெய்வமே முத்தம் தாராய்!

பாம்பரும் கச்சி யப்பப்
பகுமிறை ஞானி யாரும்
புராணமென் றருளி நிற்கப்
புகழ்க்கிரி, குருபர், நால்வர்
ஆம்பொழு தெல்லாம் கந்த
அழகனைப் பாடி வைத்த
அரும்கவி எல்லாம் எந்த
அகிலத்து முளதோ சொல்வாய்!
ஓம்எனும் மந்தி ரத்தின்

உட்கருத் தியம்ப நின்று
உலகனுக் கப்பன் என்று
உரைத்திட வைத்த செல்வ
இம்மென விறுகப் பற்றி
எனக்கொரு முத்தம் தாராய்!
இந்தவோர் பிறவி நீங்கத்
திருவொளி முத்தம் தாராய்!

*** புகழ்க்கிரி-அருணகிரி, குருபர்-குமரகுருபரர், நால்வர்-சம்பந்தர், அப்பர். சுந்தரர், மாணிக்கவாசகர்.**

காற்றொடும் மழையும் மின்னல்
கடுமிடித் திட்டும் ஊழிக்
கடலென வலைத்த போதும்
கரையுடைந் தோடு வெள்ளம்
சீற்றமாய்ப் புரண்ட போதும்
திரளியும் விளையும் தேடச்
சென்றவர் திரும்பி யோடும்
செருவலி யுற்ற போதும்
தேற்றலர் பயிர்கள் மீட்டுத்
தினவுளார் தோள்கள் விம்மத்
தெத்தனை அருள்பு ரிந்தாய்
சிறுமுகா பள்ளக் கோட்டம்
ஊற்றமர் குழந்தை வேலா
உயிர்ப்பொடு முத்தம் தாராய்!
ஏரெழிற் புதைய லூரை
இயக்கியோர் முத்தம் தாராய்!

சிறுவிரல் பற்றிக் கும்பச்
செறிகுழ லாடத் துள்ளிச்
செல்வநீ முத்த மீந்தால்
சொல்வினை யெல்லாம் விட்டு
உறுமுன தடியின் மன்றில்
உயிர்த்திட வருவேன் ஐயா!
இதழுன ததரம் கட்டி
இறுக்கியோர் முத்த மீந்தால்
குறுமுனி, கீரன், கச்சி
குருபரர் உலவும் வானில்
குந்தியுன் கவிகள் பாடக்
கொடுத்துவைத் திடுவேன் அப்பா!
நறுமலர் குவியக் கொஞ்சும்
நம்பியே ஈவாய் முத்தம்!
நற்றமிழ்க் கவிக ளார்க்கும்
நாயக தருவாய் முத்தம்! **(முத்தப்பருவம் முற்றிற்று)**

# 6-வருகை(வாரானை)ப் பருவம்

தும்பி பறக்கச் சிறகலைக்கத்
தொக்கும் வயற்குட் கொக்குலவத்
துரவிற் றுறைகாய், வெங்காயச்
சுமையிற் பகுத்துச் செல்வமிடக்
கும்பும் முலைநெற் சூடுகளில்
கொத்தும் கிளிகள் பிய்க்கவரும்
குமரக் கோட்ட மருதத்துள்
குலவும் குழந்தாய் முருகாவுன்
அம்புப் பருவம் தள்ளாடி
அஞ்சி யஞ்சி நடைபயிலும்
அழகுக் கிணையாய் யாதுண்டோ!
அமுதக் கனிவாய்ச் சதிராடும்
செம்பொற் சுடரே வாரானை
சொல்லச் சொல்ல வாராயோ!
தெள்வார் தமிழும் திருப்புகழும்
தொலிக்க வாராய் வாராயோ!

* **றுறைகாய்-மிளகாய்**

நுங்குக் கனிபோல் நூதனங்கள்
நூற்கும் முலையாள் வள்ளியொடும்
நுள்ளத் தொடுமாம் பக்கத்துட்
திருக்கும் தெய்வ யானையொடும்
பொங்கும் பள்ளம் புலத்தொடுவாழ்
பொய்கை யுதித்த கிரித்திகனே
பிள்ளைப் பருவ மென்றுன்னை
பிடித்துப் பிடித்துப் பாவாடும்
செங்கம்ப ளத்தே நீவருக!
சிவனார்க் கும்உடன் ஓம்உரைத்த
சுவாமி நாதன் தானென்றே
சொன்னோம் கொழுந்தே வாருருகத்
தெங்குப் பாளை முத்துநகைச்
செல்வா வெழுந்து வாராயோ!
தெவிட்டாத் தமிழை எனக்கருளும்
சேரா வெழுந்து வாராயோ!

உமையாள் தனத்தாய் தோயமுதம்
உருகக் கலசத் துட்பருகி
உம்பர்க் கருளப் போர்முனைக்குள்
ஓடு மசுரக் கூட்டமொடும்
சுமையைப் பொடியாய் வைத்தவனே
செல்வக் கதிர்கா மத்துள்ளே

சொக்கும் முருகர்க் கென்நாளும்
திருப்பு கழ்உம் தென்தமிழும்
அமையப் பாடும் அடியார்க்குள்
ளகத்தே யிருக்கும் சேய்முருகா!
அம்பிப் பருவ நடைபயிலும்
அழகிற் பனித்த மால்மருகா
இமையும் கண்ணு முளவேபோல்
என்னுள் ளிருப்பாய் வாராயோ
இட்டும் தொட்டும் அழைந்தாடி
இன்பம் அளிக்க வாராயோ!

**வேறு**

சித்தர்க ளென்பாரும் செவ்வேல ரென்பாரும்
தொண்டாடு கின்றவடியார்!
சேருநெறி மிக்கோரும் தென்புகழிற் செப்பாரும்
தேநாடு மெங்குமுளதாய்,
பித்துமலப் பொல்வினைக ளாறாக வந்துழலப்
பேயாக வந்தபோதும்
பொய்களவு வஞ்சுமனப் பூதாக ரம்ஐந்தும்
பிடியாக்க வந்தபோதும்,
அத்துபடி யாக்கவரு மத்தனையும் விட்டுமுரு
கையனுனக் காகிவிட்டோம்!
ஆறுமுக னென்றுதினம் ஆராத னைத்துமன
மகராதி யாகிவிட்டோம்!
கொத்தாடு மத்தமலர் கொண்டாடும் முத்தைய
கொஞ்சுநடம் விஞ்சவாராய்!
குமுதமுலை வள்ளிதெய் வானையொ டுற்றகுகா
கொஞ்சுநடம் விஞ்சவாராய்!

வாராயெ னப்புகல வரமாகி நிற்பதுன்
மனவேத மானபடியால்
வருவாயெ னப்புகல வடிவாகி அவ்வைக்கு
வாகுகனி தந்தபடியால்
வாராயெ னத்துவள வாயிலரு பேச்சுவர
வருகுமரர் கண்டபடியால்
வடிவான கந்தகலி வண்ணமிட வைத்ததும்
மணியேடு உண்டுவதனால்
வாராயெ னக்கீரன் மணியாற்றுப் பண்பாட
மாவசுரம் வென்றபடியால்
மதமான பேய்பிணிக ளடிபாடு போயகல
மனவேடு புக்குமுருகா
வாராயெ னக்கூவு மென்னாவி நீமீற
வழக்குண்டோ வண்ணவேலா!

மதனமொழி பேசிநடம் பயிலவரு முத்தைய
மனமுருக வந்தாடுவாய்!
* **வருகுமரர்-குமரகுருபரர் *மணியாறு-திருமுருகாற்றுப்படை**

போராலு முற்றவடு போகாம லல்லாட
பூதாக ரங்கலுண்டாம்!
புகையோடு சாம்பலும் தொலையாத போதிலும்
புரிவாதம் மிக்குவுண்டாம்!
நாராகத் துன்பங்க ளுருவாகப் பண்பாடு
நத்தாகிக் கெட்டதையா!
நாளோடும் குன்றாது நாமாடும் வல்லாடல்
நஞ்சாகி விட்டதையா!
வேராக மிக்கோடி விளையாடு முன்நாடு
விபரீத மென்றாகுமோ?
வேதநில மொன்றாக வேதனைக ளில்லாத
மீளுநில மென்றாகுமா?
பேராத ரிக்குமடி யாரோடு வாக்காடப்
பொழுதோடு வந்துபாராய்!
பூமேவு தண்காடு பொலிந்தாடு பொற்பாதம்
பொங்கிவர வந்தாடுவாய்!

**வேறு**

கந்தா மெல்லடி வைத்தேவா!
கற்பா மெம்தமிழ் சொற்பாவைத்
தந்தா யற்புத மென்றேவா!
தண்வேல் கைப்பட நிற்போய்வா!
செந்தூ ருற்றநற் செவ்வேள்வா!
தென்னா டாண்டிடும் குன்றோய்வா
சிந்தாய் வந்திடும் தேனேவா!
செல்வச் சந்நிதிப் பாலாவா!
வந்தாள் நல்லையின் மன்னாவா!
வன்னிக் கிளிநிலக் கந்தாவா!
அந்திக் குங்குமத் தோய்செம்பொன்
அள்ளும் முருகவே ளன்பாவா!
வெந்தா ரென்கொடு மாத்துயரை
மீட்டு வைத்திட வாவாவா!
விஞ்சும் மஞ்ஞையில் மீதேறி
விரையும் சேந்தனே வாவாவா!

மஞ்ஞை தன்னொடும் வான்பறப்பாய்
வந்தே மாம்பழ மென்றகவக்
குஞ்சே ரைங்கர வண்ணர்தாம்
கொள்ளும் முற்றுல கென்தந்தை

அஞ்சே லென்சிவ னெம்பெருமான்
அன்றோ மும்முல கென்சுற்றோய்
விஞ்சும் நற்கனி பெற்றிடவே
மிக்கோ பத்தொடு குன்றதிலே
வெஞ்சி னத்தொடு கோவணத்தும்
வீற்றோய் பொன்பழ னித்துறையுள்
மஞ்சார் பார்வதி சக்தியுமை
வந்தே யுன்செய லுக்கென்றே
கெஞ்சிப் பார்த்துமே அவ்வைதமிழ்
கேட்டுக் கின்புற நின்றனையாய்
பிஞ்சே பொற்பத மென்னடியிற்
பூத்துக் குலுங்கிட வாராயோ!

அன்பே வந்திடு ஆரூரார்
அம்பள் எம்புல மானோய்வா!
துன்பிற் றோய்தரு வாழ்வுள்ளத்
துக்கே டோட்டிட வாராய்வா!
தென்றற் செவ்வித மும்தமிழிற்
றோய்கத் தின்னொளி மின்நுதலிற்
பொன்னார் சுட்டியும் பட்டுடுத்திப்
பொங்கா ரிட்டுடை ஞாண்பொலியச்
சின்னப் பொற்பத மும்சிலம்பு
சிந்தும் தெள்நில வாயிரமாய்
மின்னும் பொற்தவத் துள்ளொளியும்
மெய்யுட் மார்பகத் தார்நூலும்
என்னத் தோர்முகத் தோய்தரவும்
என்னை யாள்பவா வாவாவா!
அன்னத் தன்வய லுள்ளூரா
ஆபத் பாந்தவா வாவாவா!

**வேறு**

கந்தா வருக! கார்மழலைக்
கனியே வருக! கண்ணொளிரும்
கருணைக் கடலே வருக!வரு
கடம்பா வருக! முக்கண்ணார்
மைந்தா வருக மொய்நடையின்
முத்தே வருக! மெய்யடியார்
மறக்கும் படியாய்ப் பிணிகருகப்
பொழியு மருட்பாக் கலிவருக!
சிந்தே வருக! செந்தூர்க்கண்
சீர்அு லைவாய்த் திரளுமணி
சூடிப் பழகு தமிழ்பொழியச்
சொல்லும் கவசத் துட்பாவின்

எந்தாய் போன்றோய் சிறுநடையாய்
எழுந்தே வருக! வருகவே!
இன்னூர் தவழும் முருகாநீ
எழுந்தே வருக! வருகவே!
**(வருகைப்பருவம் முற்றிற்று)**

# 7-அம்புலிப்பருவம்

## சாமம்

தண்குளிர் தந்திடத் தாகாய மீதுறும்
தாயெனும் பாலொளி அம்புலியே!
தாமரைப் பூவிதழ் தாங்கிடப் பேரொளித்
தங்கமா முருகென வந்தகுகன்
மண்ணொடும் சீதள மாயொளிர் வேலவன்
மாறிலா துன்னொளி ஒத்தவனாம்!
மத்தள முத்தமிழ் வார்கலை யோடிடும்
மன்னவ னென்முரு கானதினால்
வெண்ணிலா நீயுமாய் மண்ணிலே கந்தனும்
மேவிடக் காதலர் வேண்டுவரால்
விள்ளும ணிக்கவி யாளர்ம கிழ்ந்திடும்
மீர்வரு மிலக்கிய மானவரால்
வண்ணம யில்லொடும் வளர்முரு காவொடும்
வந்துநீ யாடுக அம்புலியே!
வடிவுசி காமணி மருவுபள் ளம்புல
மைந்தனோ டாடவா அம்புலியே!

மஞ்சுறு நிலவுனை வார்சடை வைத்தவன்
மறைக்கெலா மாமுத லானசிவன்
வாருழற் தேவரைக் காத்திட வென்றுரு
வைத்தமுக் கண்ணொளி யாம்முருகன்
கஞ்சப னிம்முகில் காற்றில சைந்திடக்
கார்நில வாகநீ யாடுதல்போல்
கந்தகோட் டத்திலே கார்மயில் மீதுறும்
கந்தனோ டாடவா அம்புலீயே!
பஞ்சுவெ னும்படர் பால்நிலா வார்கடல்
பட்டொளி மின்னலை பரப்பதுபோல்
பளிங்கென வாயிரம் வதனமுற் றருள்தரும்
பாலகன் வேல்முரு கப்படியே!
அஞ்சுகக் குஞ்சவன் அருட்கரத் தோடழைந்
தாகிட அம்புலீ ஆடவாராய்!
அழகுபள் ளம்புலத் தாரனோ டாடுதல்
அழகலோ அம்புலீ ஆடவாராய்!

மாலையிற் பாலொளி மயக்கிடும் தண்முக
மதியென வாகுவை அம்புலீயே
மாலையிற் பூத்திடு மலர்வனப் பூவிடும்
மாலையிற் றொளிர்வனே மயில்முருகாம்!
சோலையிற் றின்னொளி சிந்தவும் சிந்தியச்
சிந்துரம் பயிலவும் நீவருவாய்!
சோலைபோற் றண்ணளி சிந்தவும் சிந்தியச்
செந்துரன் மஞ்ஞையில் மீதுறுவான்!
மேலையோ டெத்தனை யொற்றுமை கொண்டுளீர்
மெட்டுற வாடுதல் மிகையலவே!
மெல்லவ ருங்கலை மீதுறும் ஈர்வரும்
விளையாடற் காவிய மேதருவீர்!
ஆலைமு கிழ்த்தவன் அபயக ரக்குக
னாமொடும் அம்புலீ ஆடவாவே!
அழகுபள் ளம்புலத் தாரனோ டாடுதல்
அழகலோ அம்புலீ ஆடவாவே!

## பேதம்!

ஆகாய மீதோடி அலையும்நீ விடுவையேல்
அழகனுக் கொன்றில்லை ஆமடியோ!
ஆகாயம் மாமயில் அழகேறி வலம்வந்து
அபிநயம் தருவனே அறிந்திலையோ!
கூகாகி யிருப்பியேல் குழந்தைவே லன்பாடும்
குயிலாகப் பறப்பனே கொள்மதியே!
குமரனோ மாமலைக் குழந்தையாம் நீபகல்
கொள்ளவும் மறைவியாம் ஆருகவே!
சோகாப்ப தென்பதிலான் சோதிநீ தேய்ந்துதேய்ந்
தெழில்காட்டு வண்ணமும் ஒன்றலவே!
சூரவதை தீர்த்துமறைத் சூலோடு நிற்பானைச்
சென்றுவிளை யாடுதலே சிறப்புண்டு!
மோகாம னங்கமழ முருகோடு விளையாட
முகிற்காடு அம்புலீநீ விரைந்துவாவே!
முத்தாடு மத்தாட கொத்தாடு மலராட
கொண்டாட அம்புலீநீ கூர்ந்துவாவே!

ஆரனுடன் அலைபேசி ஆயிரமா யிரத்தடியார்
அருள்காண வந்து நிற்பார்!
அலைபாயக் கடலுறங்கும் அமுதநிலா வென்றுநீ
அடிதேடிச் சென்று நிற்பாய்!
தெருவாயில் மணியொலித் திடுகின்ற முருகர்க்குத்
தினமெலாம் பூசை உண்டு!
தொடுவாயிற் றுனையேத்தித் திருவடியார் வந்திடத்
திருக்கோவி லில்லை காண்பாய்!
பெருவாயிற் குடமுனையிற் பேதைநீ உறங்கிவிடப்
புகழ்ப்பாடல் இங்கு கேட்கும்!

பெரும்பள்ளப் புலத்தான்கோ பெற்றியொடும் ஆடுகின்ற
பிள்ளையவன் சிந்து கேட்கும்!
அருவுமறை யப்பனுக் காசானாம் சுவாமியுடன்
அம்புலீநீ ஆட வாராய்!
அழகுபள் ளம்புலத் தாரனொடும் தீம்பாடி
அம்புலீநீ ஆட வாராய்!

## தானம்

புத்தரிசிப் பொங்கவிசு சுண்டலொடு பஞ்சமிர்தம்
பொரிமோத கம்மனைத்தும் தந்துதந்.. து
பொன்வயலார் பசுப்பாலும் பூப்பழங்க ளொத்தமடை
புதுப்படைய லாக்கிவரும் காலைகண்.. டு
அத்துவித மானவுண வத்தனையும் பார்த்தொருகால்
ஆனவயி றும்நிறைய உண்டுஉண் டு
ஆகாயப் பூமதியே அச்சமின்றி ஊர்ந்துமணல்
அழகான பாலனொடும் ஆடிஆ.. டி
மெத்தமுனக் காகவரும் மெய்ப்பொழுது ஊர்உலவி
முருகுதவழ் குழந்தைக்கை முட்டிமுட் டி
விளையாடிப் பாப்புனைந்து விள்ளுமிசை தான்சேர்த்து
விதம்வித மாய்க்கதைகள் விண்டுவிண் டு
சொத்துசுகம் ஏனுனக்கு சூர்தடிந்த வேலனுடன்
சுற்றிவர அம்புலீநீ ஆடவா..... வே
சொல்முருகுப் பள்ளவயற் சீர்மழலைத் தெய்வமுடன்
சேர்ந்தொருகாற் அம்புலீநீ ஆடவா... வே!

நீர்வயலூர் நிறைந்திருக் கும்நெற்சூடு குவிந்திருக்கும்
நீக்கமிலாப் பனைதெங்கும் பார்த்துபார்த்,, து
நிறைமாந்தர் வேர்வையொடும் விளைந்துரு கப்பொலியும்
வெங்காய மூர்முனையும் கோர்த்துகோர்த் து
ஏர்வயலூர் பார்க்கையிலே இன்பமெலாம் தந்திடுமா
வீரனுடன் கிளித்தட்டு ஆடிஆ......... டி
ஏர்ப்புடையல் உண்டுகளித் தினைநாடு பொன்தமிழிற்
பொழியுமு ரைகவியிற் பூத்துப்பூத்... து
கார்மழையிற் றோய்ந்துருளக் கணுக்காலிற் வெள்ளமொடும்
கனிப்பாத மிட்டுருகக் களித்துக்களித்..... து
கனிப்பாகுக் கற்கண்டுஉம் செவ்விளநீர் நுங்குமுண்டு
கந்தகுழந் தையவனார் காக்கக்காக்.... க
சீர்மழையில் லுறவாடிச் சூர்தடிந்த வேலனுடன்
சுற்றிவர அம்புலீநீ ஆடவா.... வே
சொல்முருகுப் பள்ளவயற் சீர்மழலைத் தெய்வமுடன்
சேர்ந்தொருகாற் அம்புலீநீ ஆடவா... வே!

## தண்டம்!

சூரன்வ தைசெயவே தேவமரர் தனைக்காக்க
செங்கமலத் தோடுதித்தான்!
திருப்படைக ளார்க்கவெழுந் துடைத்தழித்துப் போர்செய்த
திருக்காதை யாய்முகிழ்த்தான்!
வீரனவன் படையெல்லாம் விளங்காத நின்தயக்கம்
வினையாக வந்துவிடுமே!
வித்துவனார் கைவேலின் விளையுமொளி தெரியாமற்
வீண்நினைவும் ஏன்நிலவே!
பேரண்டம் சுற்றியவன் பெருமாம்ப ழத்தையண்ணன்
பெற்றுவிடக் கோபமுற்றான்
பெருங்குன்ற மலையேறிப் போனவனை இழுத்துவரப்
பெரும்பாடு வைத்துவிட்டான்!
சேரண்டம் நீயுலவத் தெய்வதுணை வேண்டுமடி
சேயனுடன் ஆடவாவே!
திக்குதுணை யாய்யுலவத் திருப்பள்ளம் புலத்தனொடும்
அம்புலிநீ ஆடவாவே!

கார்முகியென் பெரும்பூதம் கடித்துதறித் தின்கவெனக்
கடுஞ்சிறையி அடைபிடிக்கக்
கந்தகவி நக்கீரக் கவிமேகர் ஆயிரத்தோர்
காலவாயிற் றந்தரிக்கத்
ஆர்திருமு ருகாற்றுபடை ஆக்கிவழி படக்கீரர்
அன்புக்கு விரங்கிவந்து
அயிற்பூத மத்தனையும் அழித்துவிடக் கந்தனவன்
அருட்கவிஞர் காக்கநின்றான்!
வார்தழும்ப வந்துவிடில் வடிவேலன் இருந்துவிடான்
வண்ணநிலாத் தெரிந்துகொள்வாய்!
வகைதெரியா திருந்துநீ வண்ணமுரு கோடாட
வரமறந்து நிற்கவேண்டாம்!
ஆர்வடிவேல் கொண்டபயம் அளிப்பவனோ டுற்றாட
அப்புலீயே ஆடவாவே!
அஞ்சலெனும் பள்ளவயற் றருமழலைத் தெய்வமுடன்
அம்புலீயே ஆடவாவே!

ஆடிடவே வந்துவிடில் அருளோடு பலன்கிடைக்கும்
அறிகவெண் நிலவுலாவே!
அன்புமேலால் அவன்வருவான்! ஆர்தமிழை அகத்தியர்க்கு
அளித்தோனை நீயறிவாயே!
தோடியிலும் போதியிலும் சொல்லுமிசைச் சங்கீதம்
தோயவரும் செந்திலழகை
துன்பமிட வைத்துவிசும் போடுறவே நின்றுவிடாதே!
தோகைமயிற் காலரவம்

சூடியவன்! பேராசான் சிவனாரே மடியிட்டுப்
சொல்லும்மேன் தத்துவத்தைச்
சொலக்கேட்டார்! திருக்கந்தன் சுவாமிநாத னென்னுமுயர்
சொல்பெற்றான் விள்ளுமதியே!
ஆடிடவே வந்துவிடு! அழகொளிரும் குழந்தையுடன்
அம்புலீநீ ஆடவாவே!
அழகுபள்ளம் புலத்தீச னவனோடு விளையாட
அம்புலீநீ ஆடவாவே!

**(அம்புலிப்பருவம் முற்றிற்று)**

# (8) சிற்றில் பருவம்

சிறுமா மழலைச் சிறுவரெலாம்
சேர்ந்து சேர்ந்து மண்ணழைந்து
சிற்பக் கலையார் இல்லமைத்துச்
செறிவார் முற்றம் கலகலக்கப்
பெறுவார் இன்பம் பெற்றோடிப்
புகல்வார் கலைக்கண் பெற்றோராய்!
புதுமண் அழைந்து பெறும்வீட்டிற்
பூப்போற் கைகள் பனித்திருக்க
அறிவேல் அம்ப நீவந்து
அழிக்கும் சிறுகை ஆகாயே!
அதுகண் டுழல்வார் அருஞ்சிறகார்
அழவே அழுவார் விடுவாயே!
செறிவேல் காக்கும் செந்தூர
சிற்றில் சிதைக்கச் சிதையேலே!
செம்பொற் வளையற் திருக்கையாய்
சிற்றில் சிதைக்கச் செய்யேலே!

மருத வீதி மரநிழலிற்
மணல்மீ துருட்டிச் சிறுமுகையர்
மருவும் கலைசிற் றில்லமொடும்
மணியுன் னொலிக்க மகிழ்வாரே!
பொருதி யழிக்கப் படுவார்கண்
பொங்கும் கண்ணீர் அறியாயோ!
பூப்போற் சிறுவர் மகிழ்ந்துலவும்
பொழுதிற் சிதைக்க நீயுறவேல்!
கருதிக் கருதிக் கருணைபுகற்
கந்தா மனப்புண் வையாதே!
கஞ்ச மழலை விஞ்சுவர்தம்
கனலை மூட்டி வையாதே!

முருகுக் குழந்தாய் சிறுகையால்
முகிழ்க்கும் சிற்றில் சிதையேலே!

முயல்போற் சிறுவர் மிகக்கூடி
முகிழ்க்கும் சிற்றில் சிதையேலே!

அறிவுக் கொழுந்தே நீயன்றோ!
அவ்வைக் குரைத்த பழமன்றோ!
ஆகும் குழந்தைச் சிறுமனைகள்
அழிக்கா திருத்தல் அழகன்றோ!
உறுவேல் மைந்தா விளையாட்டின்
உருவச் சிற்றில் சிதைப்பாயேல்
உன்னைச் சுற்றி வரும்வீதி
இருக்கும் மடவார் பதைப்பாரே!
நறுமுக் கனியும் நறுந்தேனும்
நல்கும் மழலை மனம்மகிழ
நம்பொன் னம்பர் நடராசர்
நற்சேய் குழப்பம் செயலாமோ!
அறுகுத் தமிழே கலிவெண்பா
அழகே சிற்றில் சிதையேலே!
அஞ்சும் வஞ்சிக் கினிப்பாக
அறிவேல் சிற்றில் சிதையேலே!

புகழ்ப்பா தந்த அருணகிரிப்
பொய்கைத் தமிழிற் கனம்பெற்றாய்!
பொய்யா வள்ளற் பெருமானார்ப்
பேசும் தெய்வம் எனநின்றாய்!
குகப்பா குமரக் குருபரரும்
கொஞ்சும் முருகுப் பாதந்தார்!
குழந்தை நீயே என்பதுவும்
கொஞ்சும் தமிழுக் காசானாய்
அகப்பா கண்ட உன்றனுயர்
அழகே குழந்தை வடிவன்றோ!
இட்டும் தொட்டும் அழைந்தாடி
இல்லம் அமைத்து விளையாடும்
மகப்பா மடவார் மனத்துறையும்
மயிலோய் சிற்றில் சிதையேலே!
வண்ணச் சிறுவர் மனமோங்க
வரையும் சிற்றில் சிதையேலே!

வாலைப் பெண்கள் அழகெழிலார்
வளத்தைப் பெருக்கும் ஏர்மறவர்
வந்துன் வீதி தனிலுறைவார்
வடிவின் வடிவாய் செஞ்சிறுவர்
காலை மாலை உனைக்கண்டு
களித்துக் களித்து வணங்கிடுவார்!

கஞ்சப் பிஞ்சுப் பாதமொடு
தக்குப் புக்காய் நடந்துவந்து
சோலைச் சிற்றில் உருசமைக்கும்
சேயார் குடிலைத் தொடலாமா!
செஞ்சொற் கந்தப் பாகொடுத்த
தெய்வம் உனக்கு அழகாமோ!
தெய்வார் கந்தக் கதிர்காமா
சேயோர் சிற்றில் சிதையேலே!
செங்கண் அமுத வாய்உதிரும்
செவ்வேள் சிற்றில் சிதையேலே!

நல்லைக் குண்டு உன்கோவில்
நம்பொற் கொழும்பும் உனதில்லம்
நந்தா வாற்றுக் கதிர்காமம்
நடுவும் இருக்கும் உன்வீடு
முல்லைத் தீவும் நீயிருப்பாய்!
முழங்கா வில்லும் நீயிருப்பாய்!
மேடு காடு கரம்பையெலாம்
விளங்க வருமே முருகில்லம்!
எல்லாம் உனக்கு இருக்கையிலே
எழிலார் வடிக்கும் சிற்றில்கள்
இன்பப் பெருக்காம்! அதைவிடுத்து
ஏனோ சிதைக்க வருகின்றாய்!
செல்வக் கந்தா சந்நிதியின்
சேயே சிற்றில் சிதையேலே!
செல்வச் சிறுபள் ளம்புலத்துச்
செவ்வேள் சிற்றில் சிதையேலே!

போரும் வாழ்வும் பொங்கிவரும்
பொழுதிற் றோடிப் போனவர்கள்
பின்பற் றுதலாய் மீளவந்தும்
பெயரா தின்னும் இருக்கின்றார்!
வேரும் வித்தும் தினமுறங்கும்
விழுதுப் பரல்கள் விலகாமல்
விள்ளும் கலையும் மிதந்துவர
மிக்குன் பதிக்கு வருகின்றார்!
நீரும் நிலமும் ஊர்ந்துவரும்
நிசப்பூக் களிலே நிதம்பூக்கும்
நின்றன் அடியார் வயற்காலில்
நிற்குச் சிற்றில் காணுகின்றார்!
தேரும் மணியும் சப்பரமும்
தேர்வாய் சிற்றில் சிதையேலே!

திருப்பள் ளம்பு லத்தொடுவாழ்
தேவே சிற்றில் சிதையேலே!

சிற்றில் குழைத்து வளைமகளிர்
தினையம் புலத்தில் விளையாட
பற்றும் உன்றன் திருப்பாதம்
பட்டுத் தெறிப்ப நீயாட
கற்கும் உளத்துக் கனிப்பெண்கள்
கண்ணீர் உகுப்பர்! கந்தாகேள்!
பொற்கும் பத்துப் பூம்பவளம்
புரளும் சிறுதோள் மயில்வீரா
அற்றைப் பொழுதில் அணிமகளிர்
ஆக்கும் சிற்றில் களிப்பாயே!
நெற்கும் பத்துக் குவிவயல்கள்
நிற்கும் குழந்தைப் பாலகர்க்குள்
நிற்கும் முருகா கவண்எய்து
நெறியார் சிற்றில் சிதையேலே
முற்கும் பத்தின் முதல்வோனே
மோகச் சிற்றில் சிதையேலே!

வருவாய் உருவாய் வடிவேலா!
வரைமண் எழுதும் தூரற்குக்
குருவாய் இருப்பாய்! குழந்தைப்பண்
கேட்கும் பொழுது தேராவாய்!
பெருவாய் முகிழ்க்கும் பேய்வந்து
புற்றாய் வினைக ளூறும்நேரம்
மருத மரத்தின் நிழற்பக்கம்
மருவி நின்றே துயரறுப்பாய்!
உருகும் காலை ஒளிமழையில்
உருளும் நேரம் சிற்றில்கள்
பெருகிக் களிக்கும் பெண்களுடன்
பொங்கி மகிழ்வாய் பூமுருகா!
சருகுச் சிதறற் சப்தம்போல்
சகட்டாய்ச் சிற்றில் சிதையேலே
சரவ ணத்தெம் செந்தூரா
சரசார் சிற்றில் சிதையேலே!

சிதையேல் சிதையேல் சிதையேலே
சிற்பம் போலே தேன்கூட்டு
வதைபோல் நுட்பத் தெறிவாக்கி
வரையும் சிற்றில் கலையாதே!
உதைப்பாய் அடிப்பாய் மயில்முருகா
உன்றன் மருங்கிற் பயிலநடம்

விதைப்பாய் குறும்பு விளையாட்டு
வேலர்க் கென்றும் ஒருசாட்டு!
கதைபோற் துயர்ப்போர் கண்டவர்கள்
களம்போற் சுடுகண் பார்த்தவர்கள்
எதைத்தான் இனிமேற் காண்பதுவோ!
இல்லச் சிற்றில் ஆடுகையில்
சிதைத்தால் முருகா சிறப்பில்லை!
சிதையேல் சிதையேல் சிதையேலே!
செல்வ முருகா சேயிழையார்ச்
சிறப்பாய்! சிற்றில் சிதையேலே!
**(சிற்றில் பருவம் முற்றிற்று)**

## 9-சிறுபறைப் பருவம்

சிறுவன்தா னென்னினும்நீ செய்வ தெல்லாம்
செயற்கரிய தொன்றென்றே திருப்பா சொல்லும்!
உறுவதையிற் தேவரெலாம் உளலும் போதில்
உதகவன்சூ ரன்வேலி உமிழும் போதில்
மறுகணத்திற் றுனைப்பெற்றார் நெற்றிக் கண்ணார்!
மயற்கூரைத் தடித்தெழுந்து வாதை நீக்கிப்
பெறும்வாகை தனைப்பெற்றாய் பொன்வேற் சேயே!
புத்தகமும் பெருங்கதையும் பொலியும் உன்றன்
நறும்கதையே திருப்புகழும் நல்லார் நீதி
நயக்கவரும் அலங்காரம் கலிப்பா வெல்லாம்
உறும்காதை ஒன்றல்ல ஒருநூ றின்மேல்
உன்னருளாற் வாய்பேசத் துவந்தார் செப்பச்
செறும்பாவைப் பெற்றவனே செஞ்சொற் சோதித்
தேனமுதே முழக்குகவே சிறுப றையே!
சிறுகையாற் றோம்றோமென் றெம்பி யாடி
திருமுருகா முழக்குகவே சிறுப றையே!

* **உதகவன் சூரன்-தீவேலிச் சூரன்**

உறுமிபறைப் பூங்கையாற் றொலிக்க வார்த்து
இடதென்றும் வலப்பாத மென்றும் துள்ளி
சுருதியொடு சொற்பாவைச் சொல்லிச் சொல்லி
செந்தூரா பறையுலுப்பிப் பகர வாராய்!
பொருதியொரு வாழ்விழந்தும் முருகாக் கூட்டிற்
போடாரே பிச்சையென் பதுணர் கின்றோம்!
செருவாழ்வில் ஒருநாளும் தீர்க்க மில்லை
செவிவார வில்லையெனில் தீர்வு மில்லை
குருவேநீ மனமிட்டால் கோவார் மாட்டில்
குடும்பமென மினமெல்லாம் கொள்ளல் மாறும்!

அருளேநீ தந்திட்டால் அடையா மாட்சி
அடைந்திடத்துன் வயற்கோட்டம் அருளே காணும்!
தெருளெல்லாம் மாறுமென்ற தினைப்பா சொல்லித்
தெள்ளவர முழக்குகவே சிறுப றையே!
சிறுகையாற் றோம்றோமென் றெம்பி யாடி
திருமுருகா முழக்குகவே சிறுப றையே!

தெங்குகுளம் நீர்நிரம்பும் நிறையும் பூக்கள்
நிசக்கல்வி யாற்பெரிதாய் நிறுவும் கோவில்
அங்கமென மத்தியகல் லூரிக் கொற்றம்
அட்டிலென மொட்டெடுத்து அள்ளும் சேயோய்!
துங்கமுள மணிமாடம் எல்லாம் விட்டுத்
துருவத்தி லாடுகின்றோம் தினமும் எண்ணித்
தங்கமென உனைப்புகழத் தந்து பாடல்
தனிலுருகச் சொற்பேச்சுத் தமிழும் வைத்து
எங்குமுள முன்றனுக்கு இயலே வைத்த
இதயத்தி லிருக்கின்றோம்! இலங்கும் பூமி
வங்ககடல் இந்துமகா சமுத்தி ரத்து
மகிழூரில் இருந்துலகம் மெங்கும் காணும்
தெங்குவளர் கோட்டத்துத் தேன மிழ்தே
துள்ளிவர முழங்குகவே சிறுப றையே!
சிறுகையாற் றோம்றோமென் றெம்பி யாடி
திருமுருகா முழக்குகவே சிறுப றையே!

**வேறு**

தேன்தமிழாற் பாடியந்தத் திருநாட்க ளத்தனையும்
தோன்றத் தோன்ற
வான்மழையிற் றோய்ந்தநிலம் மடிமீது நடக்கையிலே
வைத்துச் சாக்கால்
மேன்றலையை மூடிநின்று மிதப்பாரைக் கொள்காட்சி
மேவு கின்றோம்!
கூன்வாடை கொண்டலெலாம் கூட்டியாடக் கொடுபுயலும்
கொள்ளத் தூடே
தான்வறுமை யள்ளாடத் தவிப்பின்றித் தாய்தந்த
தங்கச் சோற்றை
நான்உண்டேன் நற்றமிழை நீவிருவீ ரும்சொல்ல
நானே பெற்றேன்!
ஏன்முருகா வெங்களுக்கு விந்தநிலை யாம்கூறாய்
இங்கு மீண்டும்
தோன்றிவரப் புதுநிலமா யுன்மேளச் சிறுபறையைத்
திருத்து கந்தா!
துன்பமெலாம் போக்கிடுநற் றேவாவுன் சிறுபறையைத்
திசைப்பாய் கந்தா!

நள்ளிரவிற் கூரிருளில் கொண்டருகு முன்வீதி
நகர்வார் கேட்கத்
தெள்ளுதமிழ் மால்மருகா திருக்கோவி லுன்மணியை
யொலிப்பாய் என்றே
அள்ளவரும் காதையோ டாங்குவந்து அருட்காட்டி
மறைவாய் என்பார்!
முள்ளின்மேற் படுத்தாலு முன்னருளால் மொய்த்தநிலம்
மீட்பாய் அன்றோ!
பள்ளம்பு லத்தோடும் பைங்கோட்ட மென்றோதும்
பதியின் பாலா
உள்ளன்பு கொண்டோர்க்கு ஓடோடி வந்தருளும்
உண்மை கண்டோம்!
துள்ளிவரப் புதுநிலமா யுன்மேளச் சிறுபறையை
முழக்கு கந்தா!
துன்பமெலாம் போக்கிடுநற் றேவாவுன் சிறுபறையைத்
திசைப்பாய் கந்தா!

**வேறு**

தண்வயல்சூழ் மாமயிலோய் தாங்கு வெயிலொழுகும்
மண்வயத்தே வியர்வைத்தோள் வைத்துத் துரவோடும்
திண்மர் துரவுகொளும் தீரத் துழைப்பவர்கள்
கண்துயிலா திருக்கும் கனிக்கோட்டத் துள்வளரும்
எண்கோவிற் றோய்நின்று ஏற்பறையைத் தீட்டிவரும்
அண்ணலுனைச் சார்ந்து அடிதொழுதோம் எம்சேரா
நண்ணும் இசைப்பறையில் நாத முழக்கினொடும்
வண்ணத் திருமுருகா வந்தாடு மின்னிசையாய்!

கண்ணுக் கொருமருந்தே கான விழிப்பறையே
உண்ணக் கனியமுதே உப்பரிகைச் செந்நெல்லிற்
கிண்ணத் தொடுமாக்கி கிட்டப் படைப்பார்க்கு
வண்ண மயிலேறும் வடிவழகா உன்னருளைத்
திண்ணத் தொடுநல்கும் செல்வக் குமராகேள்!
விண்ணுக் கொருமருந்தே வேத விழுப்பொருளே!
மண்ணிற் கலிதீர்க்க மாப்பறையை மீட்டிடுக!
முண்காற் சிறுபறையை மெள்ள முழக்குகவே!

ஆரவயல் சுழ அரும்புட்கள் தாமிசைப்ப
நேரமணி வந்துலவத் நேர்ந்து உனையழைப்பப்
பாரமணி யாக்குவதோ பட்டபடு வேதனையிற்
தூரமொடு போகத் தினம்தொழுவார் ஏகுவதோ!
சூரவதை நீக்கிவிடத் தேவருல கேற்றோயே
சேரா தவர்க்குச் சொற்சேதி யாக்காயோ
தீரா! மயிலா! சிறுபறையிற் தெண்டனிட்டு
ஊரார் செவியிற் இசைப்பறையை யாக்கிடுவாய்!

**(வேறு)**

தவ்வற் சிறுகுழந்தாய் தாய்போல் அருட்புதையல்
தந்திங் கருள்வோனே!
தாளாத துன்பமெலாம் தடிந்து நோவாற்றித்
தபயம் புகல்வோனே!
கவ்விச் சிறுகுஞ்சைத் கவ்வும் கழுகாற்போல்
கவ்வ வரும்பேயார்
காலத் துருத்திக்குக் காவல் இடுகின்ற
கந்தா! மயிலரவம்
செவ்வற் புதம்பாயச் செவ்வேள் உனையாக்கிச்
செய்யும் அருமருந்தே!
சேவற் கொடியோனே! தெரியும் கொடியோரைத்
தீர்க்கும் செம்மருந்தே!
அவ்வப் பொழுதுபறை அம்பாய் உறைப்பதுபோல்
ஆர்த்தே முழக்குகவே!
அயில்வேற் சிறுபறையை அடித்துப் பிரசித்தம்
ஆக முழக்குகவே!

கன்னற் பொருட்பாவில் கந்தப்பா சொல்லிக்
கசிந்துருகி
மின்னும் படியாய் மிதந்தாடி முட்பாய்ந்து
வேர்க்காலிற்
உன்னிப் பரவி உறுதவமாய்க் காய்ந்து
உள்நினைந்து
பின்னும் தொழுகைப் பிரானெனன்று கூறிப்
புயம்தழுவிச்
சின்னத் துறைவார் சிறுபறை யுள்ளச்
சிலம்பொலிக்க
வன்னஞ்செய் பிஞ்சுப் பதமாடும் வண்ண
வடிவழகே!
முன்னூர் பூம்பறையைத் துள்ளி முழக்கி
முழங்குகவே!
பின்னற் சிறகாய்ச் சிறுபறை யூரத்
துலங்குகவே!

**(சிறுபறைப்பருவம் முற்றிற்று)**

## 10-சிறுதேர்ப்பருவம்

சிவனருளிற் செனித்துவரச் சிவசக்தி யருளார்க்கச்
செந்தூரில் நின்ற குமரா!
சீராரும் மணிமகுடத் தேனார்க்கும் கஞ்சமலர்ச்
சிறுபாத மூரு மழகா!
தவமுனிவர் தமிழ்கொடுக்கத் தமிழ்ச்சங்கச் சிரசாகித்
தண்பொதிகை நின்ற முருகா!

தனிக்குஞ்ச ரத்துவிநா யகரோடு பிரணவத்
தம்பியெனத் திகழ்மால் மருகா!
அவம்செய்யு மவுணருக்கு அக்குவேறா ணிவேறாக
அடியோட ழித்த வடிவேல்!
ஆரோக ணித்துவரும் அழகான தேர்கண்டு
அடியார்க ளூற்ற மயிலோய்!
சுவடுகளற் புதம்பாடும் செப்பரிய முருகையா
சிறுதேரை உருட்டி யருளே!
சிந்தொழுகு பால்வடிவச் சேய்பள்ளம் புலத்தோனே
சிறுதேரை உருட்டி யருளே!

* **அவுணர்-அரக்கர்**

குன்றேறி நிற்பதுவும் கொஞ்சுதமிழ் உகுப்பதுவும்
குழந்தைவ டிவேல ரழகே!
குறுமுனிவ ரகத்தியர்க்குக் குருவாக நின்றுதமிழ்
கொடுத்ததுவும் விஞ்சு முருகே!
அன்றூறி யருணகிரி அளித்தநறும் திருப்புகழை
ஆரம்பி ‘முத்து” என்றாய்!
அகவற்ற குமரகுரு வருளாக்கி வாய்பேச
ஆர்கலிவெண் பாவும் பெற்றாய்!
நன்றாரு மக்கீரன் நல்முருகாற் படைபாட
நசும்பூத மிருந்து மீட்டாய்!
நம்மூர்பள் ளம்புலத்து நல்லார்க்குக் கனவேறி
நடப்பதனை உரைத்து வைப்பாய்!
மன்றாடும் பெருமீசன் மகனாரே சரவணா
மலர்த்தேரை உருட்டி யருளே!
சிந்தொழுகு பால்வடிவச் சேய்பள்ளம் புலத்தோனே
சிறுதேரை உருட்டி யருளே!!

ஆதிசங்க ரர்முருகத் தருளாசி பெற்றுந்தன்
தணியாத நோய்த ணித்தார்
மோதவரு யானையை மேவுகதிர் காமனருள்
சிகண்டியார் ஓட வைத்தார்!
சோதிமயி லாகவந்து பாம்பனருட் சுவாமிசொலச்
சண்முகக் கவசம் பெற்றாய்!
சுந்தரத்தே வராயரிட்ட சொற்கந்தக் கவசமொடும்
சேரடியார்க் குறுநோய் தீர்ப்பாய்!
பாதிவழி நின்றாலும் பக்தருக் கருள்செய்யும்
பரோபகாரி என்று சொல்வேன்!
பகட்டோடு அறியாமைப் படியேறும் சிறுவோரைப்
பக்கமொடு புகட்டுமென்பேன்!
சோதிமயக் குழந்தையெனச் சொல்லவரு முருகையா
சிறுதேரை உருட்டி யருளே!

சிந்தொழுகு பால்வடிவச் சேய்பள்ளம் புலத்தோனே
சிறுதேரை உருட்டி யருளே!

ஆலையிரும் பானவயல் அள்ளுநெருப் பானசுமை
அகற்றியருள் செய்க வாராய்!
அலைந்தோடித் திரிந்தோரை அகதிபோ லானோரை
அன்பகத்திற் கிழுத்து வாராய்!
காலையொடும் மாலையொடும் காண்டாம ணிகேட்கக்
கனிந்தடியா ருள்ள மொன்றாய்
கந்தக்கோட் டம்மருவக் ககனமழை பொழிந்தாற்போல்
கலீர்கலீரென் றொலிக்க வாராய்!
வாலைக்கு மர்களொடும் வளர்பூமி நெறிபுனைந்த
மாகாதை யெழுதி வாராய்!
"யாமிருக்கப் பயமேது" என்றபடி யுன்னருளை
நல்லபடி சொல்லி வைப்பாய்!
சாலையொடும் வெளிவீதிச் சரவணரே பொற்கரத்தாற்
சிறுதேரை உருட்டி யருளே!
சிந்தொழுகு பால்வடிவச் சேய்பள்ளம் புலத்தோனே
சிறுதேரை உருட்டி யருளே!

ஓம்"சரவ ணபவா"வெனும் உள்முருகு மாறெழுத்தை
உளமெழுது வார்க்கண் ணுதிப்பாய்!
உள்ளொளியாய் நின்றுருகித் திருமுருகக் கவசமொடும்
உருகுவார்ப் பிணிகள் நீர்ப்பாய்!
சோமசுந்த ரப்புலவர் சின்னதம்பிப் புலவரெலாம்
செய்தருளப் பாடல் பெற்றாய்!
தில்லைநா தப்புலவன் தில்லைசிவன் எல்லோர்க்கும்
தேயாத கவிக ளிட்டாய்!
ஆம்மென்று எந்தனுக்கும் அருகிருந்துன் பசனையிட
அள்ளுகவி தந்து விட்டாய்!
யாருக்கு யார்செய்த பாவமோ யானறியேன்
யானுன்னை விட்டு வந்தேன்!
தீம்சுனைநற் தான்தோன்றித் திருவயலூர்ச் செவ்வேளே
சிறுதேரை உருட்டி யருளே!
சிந்தொழுகு பால்வடிவச் சேய்பள்ளம் புலத்தோனே
சிறுதேரை உருட்டி யருளே!

**வேறு**

வள்ளலார் அள்ளி வழங்கிய தீம்பா
மண்ணொடும் என்றுமே வாழும்!
வாடிய பயிருள் வாடிய வள்ளல்
மயில்முரு காவெனக் கூறும்
அள்ளுதேன் கவியிற் முருகவே லையன்
அம்பியைப் போற்றிய வாறே
அருமுனி என்கத் தடுக்கிய பாக்கள்
அத்தனை யும்முன் வண்ணம்!

துள்ளிட நிற்கும் சொற்றமிழ் வேலோய்
திரட்டென உந்தனுக் காக்கிச்
செவ்வழி சொல்லிச் சொல்வழி சொல்லிச்
செப்பிய தெல்லமெம் சொத்தாம்!
வள்ளிதெய் வானை வயங்குளத் தோனே
மணிரதம் உருட்டியே யருள்க!
மலர்முகம் களிப்ப மண்ணகம் செழிப்ப
மணிரதம் உருட்டியே யருள்க!

கந்தபு ராணக் கச்சியப் பர்தம்
காதையில் முருகநின் பாக்கள்
கட்டுபத் தாயி ரம்மெனும் பேறு
கடவுளர் யார்க்குமே யில்லை!
இந்தகம் பீர இறையருட் பாடல்
எம்மொழி தன்னிலு மில்லை!
இவ்வுளத் தோடு மிவ்வுல கெங்கும்
எழுந்திருக் கும்பொழு திதுவாய்
வந்தகம் தொழுவார் மயிலவர்க் கெழுதும்
வருத்தமெல் லாமுமே யழிப்பாய்!
வயலுறும் பள்ளம் புலத்தொடும் அமர்ந்தோய்
வண்ணமும் எண்ணமும் தருவாய்!
வெந்தமண் தன்னில் வினைதிரண் டோட
சிறுரதம் உருட்டியே யருள்க!
வீரறு படைவாழ் வேலனே பாலா
சிறுரதம் உருட்டியே யருள்க!

போதையும் அழிவும் புரண்டுமே ஓடப்
பொன்மயில் வேலவா அருள்வாய்!
புத்தியும் காவும் பொய்யெறி யோடும்
பேயரென் றானதும் அறிவாய்!
சாதியும் உழக்கும் வல்லுற வென்றும்
சகட்டுட நடக்குதே அய்யா!
சார்ந்தவர் என்றும் சரிந்தவர் என்றும்
சங்கடம் பார்க்கிறார் பொய்யார்!
பேதியாய் உண்ணப் பீச்சிடும் தீதிற்
பொரிந்துமே விட்டது நிலமே!
புல்லரும் மொய்க்கும் பீர்க்கடை தூளாய்ப்
பிளந்துவந் துற்றதே இன்று!
சேதிநன் றாக்கிச் செயலரும் பாக்கிச்
சிறுரதம் உருட்டிவா முருகா!
தின்வள நாடு திரும்பவும் செம்மைச்
சிறுரதம் உருட்டிவா முருகா!

**வேறு**

சூல மோடு வேல னாடும்
தீர நட்புப் பூமியில்
சேதி யோடு தேரு மோடச்
செய்து நின்ற வாழ்வதில

கால மானி தீய துக்குள்
கோடி விட்ட போதிலும்
கான மாக நாளு மாகக்
கனியும் என்ற ஆசையில்
பால மாக நேய மாகப்
பார்த்து ஏங்கும் பாதையில்
பாவ கோபம் மாறத் தூறும்
பாட மோடு காணவென்
கோல சீல ஞால வேல
தேரை ஓட உருட்டுக!
சேய சேர ஆர ஊரத்
தேரை ஓட்டி அருளுக!

தீய கோணம் தீர நாடு
தீர்க்கும் என்ற நேர்மையில்
தேரை ஓடச் சேய செய்யச்
சேரும் காட்சி ஆசையில்
மாய வாச பூசை ஓட
வாரும் உண்மை என்பதில்
மான தீனக் கான மோடும்
வைகும் காட்சி மீளவும்
தாய மாக ஆடல் எல்லாம்
தறிக்கும் காலு மாகையில்
தூய நாடு நேய மாகத்
தேற வேண்டு மென்றிடப்
பாயு மஞ்ஞைப் பால தேரைப்
பாடி ஆடி உருட்டுக!
பள்ளக் கோவில் விள்ளும் கந்தப்
பால தேரை உருட்டுக!

**சரவணையூர் பள்ளம்புலம், குமரக்கோட்டம்**
**திருமுருகன் பிள்ளைத்தமிழ் முற்றிற்று**

# துவாசதப் பாமாலைக்கான மனவுரை

சில நேரங்களில் நம் ஊர்,
நாம் வாழ்ந்த வீடு, சூழ்ந்த கோவில்
வாசல்கள், கடவுள், நாடு என்கப்
பல்வேறு சிந்தனைகளின் பாற்பட்டுப்
பொழுது மாறுகிறது.

பதினையாயிரம், இருபதாயிரம்
மைற்கற்களுக்கு அப்பாற்பட்டுப்
புலம்பெயர்ந்து நிற்பவர்களுக்கு
இந்தப்பொறி இன்னும்
அழுத்தமாகிக் கொள்கிறது

போர் ஒன்றில் கார்முகில்கள்
கந்தகமாகிக் கொண்ட
கால வரலாற்றில்..
சிதிலமாகிக் கொண்டவை..
நிலம் மட்டுமல்ல எங்களது
சித்தமும் தாம்!

பிடிவாதங்கள் முளை அறுந்துபோய்
கடிவாளங்கள் அற்ற எங்கள் கார்நிலம்
செழித்துவரச் செல்லும் ஊழிகள்
எத்தனைதான்?

மச்சமாகிவிட்ட மனிதவாழ்வு
மிச்சமிருந்தால் பார்ப்பதற்கு மட்டுமே
இந்தப் பக்தி இலக்கியம்..

காதல்மண் மீது பரவும் ஒரு
கடவுள் இலங்கியம் இது.
மற்றும்படி பிழையிருந்தால் மன்னித்தருள்வீர்!

-அன்பன் இராசலிங்கன்.

# நூல்: 02

# பள்ளம்புலத் திருவயலூர் துவாதசப் பாமாலை!

(பன்னிரண்டுவகைப் பாக்கள்)

தீவகம் வே. இராசலிங்கம்

# பள்ளம்புலம் திருமுருகன் துவாதசப் பாமாலை!

**காப்பு**

ஐங்கரத்தான் ஆனைமுகன் அங்குசத்தான் எப்பொழுதும்
பொங்கும் முதல்வணக்கப் போதமுளான்-இங்குமவன்
தும்பார் முருகன் துவாதசப் பாமாலைச்
செம்பா அருள்வான் சிறப்பு!

*தும்பார்-போரிடுதலைக் கூறும் ஒரு பொறிமுறை

## நூல்

**நேரிசை வெண்பா!**

விஞ்சுகரத் தஞ்சலென வேல்வந்து காட்சிதரும்
நெஞ்சில் நினைக்கவரும் நீலமயில்-கஞ்சமலர்ப்
பாதம் சிலம்பொலிக்கப் பட்டுடுத்திச் சேய்முருகன்
வேதம் ஒலித்திடும்மண் வேர்!

**அறுசீர் விருத்தம்!**

முருகனின் மணியே முத்தம்
மொழிந்திட வெட்டுத் திக்கும்
பெருகிடத் தொலிக்கும்! கேட்டுப்
பெரும்பணி யோடும் மக்கள்
உருகிடத் திறைவா வென்கும்
உயர்புலத் திருக்கும் வேளே!
திருமறைப் புகலாம் தெய்வத்
திருமுகா போற்றி! போற்றி!

**கலிவிருத்தம்**

போற்றி யெம்முளம் தோன்றியெ வருபவா!
போற்றி கந்தனென் றேயிறை யானவா!
போற்றி யின்னருள் புரிந்திடு சண்முகா!
போற்றி பள்ளமார் பொன்வயல் வேலவா!

**கலித்துறை**

நின்னை எண்ணியார் நிலத்தொடும் கூடிய நிழலில்
என்னி னுள்வரும் எல்லமும் உன்னருட் தொகையே!
வன்ன மாமயில் ஏறிடும் வண்ணமே பெருகத்
துன்ப மேயெலாம் தொலைந்திடு மென்பதுண் மையே!

**ஆசிரியத் தாழிசை**

கொன்றை மரத்துக் குளிர்தரு பூக்களே
நின்று சொரியும் நிலத்துட் குருகுகள்
சென்று திரும்பும் சிறப்பினாய் சேர்கவே!

ஈச்சம் பழமும் இலந்தைப் பழமுமாய்
காய்ச்சும் பழுத்தும் கவ்வி இழுக்கும்
பாய்ச்சு முள்ளொடும் பார்க்குமெம் பாலகா!

இயற்கை அளிக்கும் இனியன வெல்லாம்
மயக்கும் முருகாய் மயங்கிய வேலோய்!
பயக்குபள் எம்புலத் தோனே! பதமருளே!

**எழுசீர் விருத்தம்**

ஆலமே யுண்ட அப்பனார் அருள
அளப்பெரும் காவலார் தெய்வம்
பூவுல கத்தே பூத்தனர் அந்தப்
புண்ணியம் உந்தனுக் காகி
வேலவா யுன்னை மிகுபடச் சூழ்ந்து
விளங்கிடும் பைரவர் மூவர்
சூலமுக் கடவுள் தொடர்ந்துனைக் காக்கும்
திருவயல் தன்னையான் கண்டேன்!

**கட்டளைக் கலித்துறை!**

சின்னஞ் சிறுமுகை யென்னத் துருவிய செண்பகனே
நின்னை நினைந்துரு வாக மனக்குகை நெஞ்சுருகி
அன்னப் பொழில்வய லாரனே யற்புத மென்றுநிதம்
கன்னற் தமிழுமுன் காதற் கவிதரக் காட்டினையே!

**எண்சீர் விருத்தம்**

வடகிழக்குத் திசையாரத் தையனார் திருக்கோவில்
மாவாலத் தோடு நிற்கும்!
இடமுனக்கே யிருக்கின்ற எழிற்தெய்வத் தவனோடு
இனியநிலக் கோவில் பெற்றாய்!
கடலோடு பெருந்தரவைக் காடோடும் உனதெல்லைக்
கந்தகோட்ட முற்று மோடும்
திடலோடு பெம்மானே திரிந்துலவி அருள்கின்ற
திருமுருகா வெம்மைக் காப்பாய்!

**கட்டளைக் கலிப்பா!**

உள்ள வார்கடல் ஓம்பவு ரைத்திடும்
உந்து தேவரத் தின்முறைப் பாவெலாம்
விள்ளு மானிடர் வீற்றிருந் தோதுவர்!
மேவு முள்ளுரை மீட்பவர்
அள்ளு காட்சியும் ஆரரு ளாற்றினுள்
ஐக்கி யப்படு கின்றடி யாரொடும்
பள்ள அம்புலப் பாலகா நின்புகல்
பாரி லூர்ந்தவர் பற்றொடு மாகுதே!

**சந்த வஞ்சி விருத்தம்**

மைந்தா முக்கணில் வந்தோனே!
கந்தா பன்னிரு கையோனே!
எந்தாய் யென்றிடத் தானாகித்
தந்தாய் இன்னருள் தாம்வேலா!
செந்தூ ரம்மலைத் தூற்றானாய்!
சிந்தூ ரத்திசைக் காற்றானாய்!

நந்தா மின்னொளி நாதாவே!
வந்தா எம்புலத் தாரூரா!

**இயல்தரவினைக் கொச்சகக் கலிப்பா!**

ஆற்றலை போலு மகத்தொடு மாத்துயர்
கூற்றலை வாய்ப்படு மாறு உழன்றவர்
சேற்றலை வாய்ப்படு சேலெனச் சிக்கிடக்
காற்றலை போலும் கடுகி மடிந்தனர்!
ஊற்றலை யோடிய உட்புய லாமொடும்
வீற்றலை யால்மரம் வீழ்ந்தது போலஎம்
ஊற்றலை அழிந்தது! ஓங்கு சிவனவன்
சூற்றலை மைந்தா! திருவூர் வருகவே!

* சூற்றலை-ஆயிரமாயிரம் அணுவின் உலைபோல்

**நிலைமண்டில ஆசிரியப்பா!**

பள்ளம் புலவார் பதியினிற் கனிந்து
உள்ளம் உவக்கத் தினிக்கும் செவ்வேள்
கனவும் நனவும் காட்சி கொடுத்துத்
தினமும் ஒலிக்கும் திருவேல் முருகா!
இன்நாள் இருந்து என்நாள் வரைக்கும்
உன்நாள் இயற்றித் துன்கடன் பணிசெய
என்னைப் பணித்தாய்! ஐம்பொறி அதனில்
இன்னமும் தூய்மை எடுத்திலேன் யானுனைப்
பாடப் பாடப் பசுமரத் தாணிபோல்
ஏடும் இயலும் எங்கெங் லாமும்
தேடித் தேடித் துன்கதை யோர்ந்தேன்!
கூடி மருதக் குருத்தில் உறையும்
குமரக் கோட்டத் துறையுறை வோனே
அமருங் கோவிற் றழகா அருள்வாய்!

**நேரிசை வெண்பா!**

தேவர் வதைமுடிக்கச் சூரன் கதைமுடிக்கத்
தேவன் சிவனார்க்கண் தோன்றியவா-பாவவதை
எங்கெல்லா முண்டாமோ அங்கெல்லாம் வேலாநின்
பொங்குகரம் வேண்டும் புரி!

**அறுசீர் விருத்தம்!**

உன்வழி யேகிக் கல்வி
இயலிடும் சாலை காணும்
பொன்வழி யூடே உன்றன்
பொன்னகம் கண்டு செல்வேன்!
என்கரம் உன்னை யேத்தித்
தொழுதிறை யாக்கும் அந்நாள்
இன்தமிழ் பெற்றேன் அந்த
இயலெலாம் அருளுன் தாமே!

**கலிவிருத்தம்**

ஆத்தி சூடிமன் றம்முரு கானநின்
சாத்தி ரத்துறை சார்பிடும் பூமியிற்
சேத்தி ரங்களும் பள்ளிகள் ஆலயம்
நேத்தி ரம்மென ஆக்குவா ரார்கவே!

**கலித்துறை**

கண்ணு தல்மகன் கைலையின் உமையவள் பிள்ளை
எண்ணொ டும்புக லேரிடும் மெழுத்தெலாம் தந்தாய்!
மண்ணொ டும்மலர் கவிதையும் மாண்புகற் றமிழும்
பண்ணொ டும்மிசைப் பாடலும் மெள்ளவே பணித்தாய்!

**ஆசிரியத் தாழிசை**

தாழையும் பற்றைத் தரிசெலாம் மேயுமாறு
ஏழைப் பசுசேர்ந் துலவிடும் பாலுமாகப்
பாழி வயலூர் படைத்தனை பார்முருகா!
* **பாழி-மருதலூர்**
மாரி வழங்கிட வார்குளம் பொங்கிட
நீரில் மிதக்கும் நெடுந்துறைத் தோட்டமும்
காரிற் புகையிலை காண்கக் கனிந்தனையே!

போரில் அழிந்தவை யிந்தநற் பூமியில்
சேரவே செய்குவை செந்துரா நின்னருள்
ஆரப் புலத்தொடும் ஆக்குவை யாமடா!

**எழுசீர் விருத்தம்**

காலமே அள்ளக் கப்பலும் மூழ்கக்
கற்பனை அற்றதோர் கனலாய்
சீலமே வற்றிச் சிற்சுனை எல்லாம்
சேரணை முற்றிலும் சிதறக்
கோலமே கெட்டுக் குளங்கரை எல்லாம்
கூர்நெருப் பாகவே எரியத்
தாலயம் சிதையத் தள்ளவுன் னடியார்
தாங்கவோ அம்புல வேலா!

**கட்டளைக் கலித்துறை**

ஓர்நா ளிரவுத் திரையொடு வந்தே யிரும்கனவிற்
தேர்போந் துலவும் தெருவெலாம் நின்று திளைத்தாடித்
தூர்மா வயலும் துரவோடு தோட்டமும் துள்ளநின்றோம்!
வார்நாள் விடியக் கடிதம் கனடா வருகென்றதே!

**எண்சீர் விருத்தம்**

நின்னடியார் நின்சுனையார் நிலம்பூமி யாவிலுமே
நினைவிழந்து நின்ற போதும்
என்னதுணை என்னகதி யென்றுவுனை நொந்தபடி
இடர்புகவே வந்த போதும்
கன்னலெனும் கனிமொழியான் கந்தவுனைப் பிள்ளையெனக்
கவியார எழுத்தி நின்றோம்!

தென்னைமருங் காடுமொரு தீம்நிலத்து அருட்குமரா
சேருவயல் நின்று காப்பாய்!

**கட்டளைக் கலிப்பா!**

பள்ள வம்புலம் பங்கமின் றியோர்
பாத கிண்கிணி யாக்குவை வேலவா!
துள்ளு மீன்குளத் தோட்டமும் அஞ்சிறைத்
தும்பி யார்த்திடும் திக்கெலாம் நின்றுநீ
பள்ளு தேன்தமிழ்ப் பாடலோ லாடிடும்
பக்தர் காணுவை! பற்பல பேருரை
அள்ளு மாவிழா வாகுவை! செந்துரா
அன்பு வாழ்நிலம் காக்குவை யாமலோ!

**சந்த வஞ்சி விருத்தம்**

நொந்தே யிக்கணம் நிற்போமை
வந்தே மாதருள் செய்யாயோ!
பொந்தே ருற்புல மண்டுபம்
சந்தம் மென்றது கத்துங்கால்
எந்தாய் மண்ணாய் யிருப்பானே!
செந்தார் நெய்யிற் தீபம்செய்
செந்தூர் மயிலோய்! திருக்கோவில்
வந்தாள் இறையே வாராயோ!


**இயல் தரவினைக் கொச்சகக் கலிப்பா!**

கன்னற் பழச்சுவை கண்மிப் படைத்திடத்
தென்னைத் துரவிடும் தேனிள நீருமாய்
வன்னப் பலாப்பழம் மாவொடு தீங்கனி
அன்னப் புதுநெற் றரிசியிற் பொங்கியே
உன்னை இருத்தி உவந்திடும் மாநிலம்
என்னக் களித்திடும் ஏர்வேல் அழகரே!
சென்னைத் தலைவாய்ச் சிவமுரு கானவா!
துன்பத் தேரலைத் தீர்த்தரு ளாக்குவாய்!

**நிலைமண்டில ஆசிரியப்பா!**

ஞான பைரவர், நல்லெழில் அம்மன்,
வான வைங்கரன், வீர வையனார்
சூழக் கனிந்த தெய்வத் துறைநிலம்
வாழும் முருகனே! வள்ளிதெய் வானைஅம்
மாதொடும் மாமயில் வணங்கொள் அழகனே!
யாதெது வாகினும் யாரடி யாரெனும்
கோதில் உதித்துக் குறையெலாம் உதிர்க்கும்
தாதில் மலர்ந்த சரவணத் தையநின்
கருணைக் கடலில் கவலைக ளாற்றித்
துருகுவார் உள்ளத் தோடிணை யாகுவை!
குருவும் உருவும் குழந்தை வேலென
பருவம் ஆகினும் படைப்பி லக்கணம்
எந்தாய் என்றே இறைத்தனை அறிவோம்!
வந்தே மாதரம் மயிலிறை யோனே!

**திருமுருகன் துவாதசப்(பன்னிரண்டு வகை)ப் பாமாலை முற்றிற்று.**



இலங்கை, வேலணைத் தீவிலே, சரவணையூரில்
1947ஆம் ஆண்டு மாசிமாதம் 21ஆம் திகதி
வேலாயுதர் சிவக்கொழுந்து தம்பதியினரின் புதல்வனாக
கவிஞர் வே. இராசலிங்கம் பிறந்தார்கள்.

இவர் பிறந்த சூழலிலேதான், தில்லைநாதப் புலவர்,
வித்துவான் க.வேந்தனார், கவிஞர் தில்லைச்சிவன் ஆகியோர்
அவதரித்திருந்தனர். இதனால்தானோ என்னவோ அல்லது
இவருடைய தெய்வமான பள்ளம்புலம் குமரக்கோட்டம்,
ஸ்ரீ திருமுருகன் அருளாட்சியோ கவிஞர் இளம்வயதிலேயே கவிபாடும்
ஆற்றலைப் பெற்றிருந்தார்.
கவிஞர் அவர்களின் முதற் கவிதை ஒன்றினை பிரசுரித்தது அப்போது
வெளிவந்து கொண்டிருந்த "தாய்நாடு" பத்திரிகை. பின்னர் ஈழத்தின்
பல பத்திரிகைகளில் இவரது கவிதைகள் பிரசுரமாகின.

அழகியல் உணர்வினைத் தூண்டவல்ல கவிதைகளை எழுதுவதில்
ஆற்றல்மிக்க கவிஞர், பக்திச்சுவை மிளிரும் கவிதைகளையும்
ஆக்கியுள்ளார். குறிப்பாக பள்ளம்புலம் முருகன் மீதம் பல
தனிக்கவிதைகளை யாத்துள்ளார்.

கனடாவில் இருந்து வெளிவந்த "நம்நாடு" பத்திரிகையின் பிரதம
ஆசிரியரான கவிஞர் அவர்கள் பல இன மேம்பாட்டுக் கவிதைகளை
தனது பத்திரிகையில் பிரசுரித்துள்ளார்.
பள்ளம்புலம் குமரக்கோட்டம், திருமுருகன் பிள்ளைத்தமிழ் என்னும்
இந்நூல் காலத்தாற் சிறந்து விளங்கிப் பக்தியருள் கொடுக்கும்
என்பதில் ஐயமில்லை.

**சி.தயாபரன்,**
**அதிபர், விகடன் அச்சகம்-கொழும்பு**

---

**நூல் வடிவம்: விகடன் அச்சகம்- கொ/ழும்பு-0119411-250-4370**